ஸ்ரீ

மாரியம்மன் என்று வழங்குகிற

மருதாசு படவேடு

எல்லையம்மனாகிய

ரேணுகாதேவி சரித்திரம்.

இஃது

மருதாசு படவேடு

தேவஸ்தானம் தர்மகர்த்தா

இரத்தின முதலியார்,

புதுவை - வெகுதனம் துரைசாமி ஐயர்

இவர்கள் விருப்பத்தின்படி

வெளியனூர் - சேஷையரவர்கள்,

புதுவை - வரதராஜ உடையார்

இவர்களியற்றியது.

சென்னை:

மினெர்வா அச்சியந்திரசாலையிற்

பதிப்பித்தது.

1905.

விலை] Copy Right Registered. [அணா 4.

ஸ்ரீ

மாரியம்மன் என்று வழங்குகிற

மருதரசு படவேடு

எல்லையம்மனாகிய

ரேணுகாதேவி சரித்திரம்.

இஃது

மருதரசு படவேடு

தேவஸ்தானம் தர்மகர்த்தா

இரத்தின முதலியார்,

புதுவை - வெகுதனம் துரைசாமி ஐயர்

இவர்கள் விருப்பத்தின்படி

வெளியனூர் - சேஷையராவர்கள்,

புதுவை - வரதராஜ உடையார்

இவர்களியற்றியது.

294.551
R-525

சென்னை:

மினெர்வா அச்சியந்திர சாலையிற்

பதிப்பித்தது.

1905.

[விலை அணா 4.]

முகவுரை.

இவ்வுலகினரால் சாதாரணமாக மாரியம்மன் என்று வழங்கப் பெற்ற ரேணுகாதேவியின் சரித்திரமானது இதுகாறும் வடமொழி யிலேயே யிருந்து கற்றோர் ஒவ்வொருவர்க்கு மட்டுமே பயனாகிவந்த தென்பது யாவருமறிபற்பாலதே. அங்ஙனமாயிருப்பது எமது மனத் தினுக்கு மட்டற்ற வெறுப்பைத் தந்ததால் வடமொழியிற் சரித் திர ரூபமாயிருந்த இந்நூலைத் தென்மொழியில் பண்டிதர் பாமரர் ஆகிய இருவகையினரும் தெள்ளிதினுணர்ந் துய்யுமாறு வசனரூப மாக மிகவும் இனிய செந்தமிழ்நடையில் இயற்றியுள்ளோம். ஆயினும் இன்னதை யுலகினர்க்கு வெளிப்படுத்தி யதனாலாகும் நற்பயனையடைய வேண்டும் என்ற பேரவாவையே பெரும்பயனாக் கருதி எமக்குக் கிடைத்த அவகாசங்களி லவசரமாக எழுதி முடித்துள்ளோமாத லால் இதனிடையிடையே சிறிது பிழைகளிருக்கினுங்கூடும். ஆனது பற்றி இதைப் படிக்கும் புத்திமான்கள் யாவரும் சொற்களின் பிழை களை நோக்காது பொருட் சிறப்புக்களையே நோக்கிக் களிக்குமாறு வேண்டுகின்றோம்.

உ

ஸ்ரீ ரேணுகாதேவியை நம:

மருதரசு படவேடு

எல்லையம்மனென்று வழங்கும்

ஸ்ரீ ரேணுகாதேவி சரித்திரம்.

வந்தே ஸ்ரீரேணு காந்தே வீம்
குண்டலீ புரவாஸி நீம்
பக்தேஷ்ட கல்பலதிகாம்
சங்கரா சார்ய பூஜிதாம்.

நைமி சாரண்ய மென்கிற வனத்தில் ஸூத மஹா முனிவரைப் பார்த்து, சௌநகாதி ரிஷிகள் கேழ்க்கத்தொடங்கினார்கள். ஓ ஸூத மஹா முனிவரே பூலோகத்தில் ஸகல க்ஷேத்திரங்களுக்குள் க்ஷேத்திரத்திலும், தீர்த்தத்திலும், தெய்வத்திலும் அதிக பெருமைபெற்றதாய் உள்ள தெதுவோ அதை யெங்களுக்கு ஸவிஸ்தாரமாய்ச் சொல்லவேணுமென்று கேழ்க்க ஸூத முனிவர் சொல்லுகிறார். கேளுங்கள் ரிஷிகளே பூமியில் ஸமஸ்தமான க்ஷேத்திரங்களுக்குள் உத்தமமாய் நினைத்த மாத்திரத்தில் இஹபர சுகங்களைக் கொடுத்து ரக்ஷிக்கும்படியான மஹிமையுள்ள ஒரு க்ஷேத்திரமுண்டு. அது எவ்விடத்திலிருக்கிறதென்றால் விந்திய மலைக்குத் தென் திசையாயும் க்ஷீரநதிக்கும் பாகுநதிக்கும் மத்தியில் கமண்டல நதிக்கரையில் குண்டலீ புரமென்கிற ஒரு பட்டணமுண்டு. அவ்விடத்தில் ஜமதக்னி ரிஷியினுடைய ஆசிரமமும் ரேணுகா தேவியினுடைய ஆலயமும் இருக்கின்றது. அந்த ரேணுகா தேவியானவள் தன் மாயா சக்தியினாலே, ஸமஸ்த சராசரங்களையும் ரக்ஷித்துக் கொண்டிருக்கிறாள். அந்தப் பட்டணத்தில் ஆயிரத்தெட்டு சிவாலயமும், நூற்றெட்டு விஷ்ணுவாலயமும் இருக்கின்றன. அப்பேர்ப்பட்ட க்ஷேத்திர மஹிமையைத் தெரிந்தவரைக்கும் சொல்லுகிறேனென்று தேவியைத் தியா

னித்து ரிஷிகளுக்குச் சொல்லத் தொடங்கினார். கேளுங்கள் ரிஷிகளே பூர்வத்தில் சூரிய வம்சத்தரசனாகிய விவஸ்வானென்றும் ஒரு அரசன் அயோத்யா புரியை ஆண்டுகொண்டிருந்தான். அவன் விருஷபா சுரனென்கிற ராக்ஷஸனோடு யுத்தஞ் செய்து அவனால் அபஜயமடைந்து அயோத்தியா புரியை விட்டு காட்டிற் சென்று மிகவும் கஷ்டப்பட்டு வஸிஷ்டாச்சிரமம் வந்து சேர்ந்து ரிஷிக்கு நமஸ்கரித்து தன்னுடைய கஷ்டங்களெல்லாவற்றையுஞ் சொல்லி விசனமடைந்தான். அப்போது ரிஷி சிரேஷ்டரான வஸிஷ்ட மஹா முனிவர் அந்த ராஜனைப் பார்த்து ஆசிர்வதித்து அவன் சொன்ன வசனங்களைக் கேட்டு தான் ஞான திருஷ்டியினா லறிந்துகொண்டு சொல்லுகிறார். கேளும் விவஸ்வான் ராஜனே! வீருண்டவீ நகரவாஸியாகிய ரேணுகா தேவியின் அனுக்ரஹத்தால் உன்னுடைய கஷ்டங்களெல்லாம் நீங்கி சௌக்கியமடையப் போகிறாயென்று சொன்ன உடனே சுவாமி, அந்த [illegible] நகர மெவ்விடத்தி லிருக்கின்றது. அந்த தேவியினுடைய மஹி[illegible] அவைகளையெல்லாம் ஸவிஸ்தாரமாய்ச் சொல்லுங்களென்று கேட்[illegible] விவஸ்வான் ராஜனைப்பார்த்து முனிவர் சொல்லத் தொடங்கினார்.

க-வது அத்தியாயம் முற்றிற்று.

உ-வது அத்தியாயம்.

பூர்வத்தில் பிருகு மஹா ரிஷியின் குமாரராகிய ருசீகரரென்கிற முனிவர் தன்னுடைய விவாகார்த்தமாய் காசி தேசத்தரசனாகிய குசாம்பன் குமாரன் காதி யென்கிற அரசனிடத்தில் வந்து உனது குமாரத்தியாகிய ஸத்யவதியை எனக்கு விவாகஞ் செய்து கொடுக்கவேணுமென்று கேட்க, அதற்கரசன், ஓ முனிவரே! நீல வர்ணமுள்ள செவிகளும் வெண்ணிறமுள்ள தேரகமுடைய ஆயிர மஸ்வங்கள் கொண்டு வருவீராகில் எனது குமாரத்தி ஸத்யவதியை உமக்கு பாணி கிரகணஞ் செய்து கொடுக்கத் தடையிராதென்று சொல்ல, முனிவர் உடனே வருணனிடத்திற்கேகி ஓ, வருணதேவா. காசி நகரத்தரசன் குமாரத்தி ஸத்யவதியை யான் பாணிகிரகணஞ் செய்து கொள்ளும் நிமித்தம் அவரைக் கேட்டதற்கு நீலச் செவிகளும் வெண்ணிற தேரகங்களுமுள்ள ஆயிர மஸ்வங்கள் கொண்டு வந்தால் எனது குமாரத்தியைத் தருவேனென்றார். அந் நிமித்தம் உன்னிடம் வந்தேன். அவைகளைக் கொடுத்து கன்னிகாதான பலனை அடைவாயென்றார். வருணன் குதூகலித்து தடையின்றிக் கொடுத்தார். முனிவர் மகா சந்தோஷத்துடன் பெற்றுக் கொண்டு அவைகளை அரசனிடமளிக்க, அரசன் தனது குமார[illegible]தியை முனிவருக்கு நல்ல சுபமுகூர்த்தத்தில் கன்னிகாதனஞ் செய்துக் [illegible]டுத்தார்.

முனிவர் தனது பாரியான் ஸத்யவதியை அழைத்துக்கொண்டு, கன்யாகுப்ஜ மென்கிற ஸ்தலத்திற்கு வந்து அங்கனே தவம் புரிந்து கொண்டிருக்கையில், ஒருநாள் அவருடைய பிதாவாகிய பிரகு ரிஷியானவர் தனது புத்திரனையும் மருமகளையும் பார்க்கக் கன்யா குப்ஜத்திற்கு வந்தார். அதை யறிந்து ருசிகரும் அவர் பத்னியும் எதிர்க்கொண்டுவந்து ஸாஷ்டாங்க நமஸ்கரித்து ஆஸனங் கொடுத்து உபசரித்தார்கள். முனிவர் அதிக சந்தோஷமடைந்தவராய் அவர் களை ஆசீர்வதித்து ஸத்யவதியைப் பார்த்து ஓ, பெண்ணே! உன்னுடைய சுகுணங்களுக்கு மெச்சினேன். உனக்கேதாகிலும் கோரிக்கை யிருந்தால் கேட்டுக்கொள் என்று முனிவர் சொன்ன மாத்திரத்தில் ஸத்யவதி ஆன ந்தசாகரத்தில் மூழ்கினவளாய் மறுபடியும் முனிவருக்கு ஸாஷ்டாங்க நமஸ்க ரித்து. ஓ ஸ்வாமி! எனக்கொரு குமாரனும் எனது தாயாருக்கொரு குமாரனு மனுக்கிரகிக்க வேணுமென்று பிரார்த்தித்து நிற்க, அப்படியே ஆகுமென்று முனிவர் ஆசீர்வதித்து பிரம்ஹமந்திரங்களினாலே யாகஞ்செய்வித்து இதினா லுண்டாகிய அவிர்ப்பாகம் ஒன்றும் க்ஷத்திரிய மந்திரங்களால் யாகஞ்செய்வி த்து அதினாலுண்டாகிய அவிர்பாகம் ஒன்று ஆக இரண்டையும் அவள்கையில் கொடுத்து நீங்களிருவரும் சுசியாய் முதல் கொடுத்ததை நீ சாப்பிட்டு அத்தி மரத்தைச் சுத்தக்கடவாய், இரண்டாவது கொடுத்ததை உன்னுடைய தாயாருக் கொடுத்து அரசமரத்தை பிரதக்ஷணஞ் செய்யச் சொல்லுவாய். இப்படிக்கு நீங்களிருவருஞ் செய்வீர்களாகில் உங்களுக்கு புத்திரஸந்தானங் கிடைக்கும் என்று அனுக்கிரகித்து தன் ஆச்ரமம் போய்ச்சேர்ந்தார். பின்னர் ஸத்யவதி யும் அவள் அன்னையும் ஸ்நானஞ் செய்து ஸுசிலர்களாய் தான் புசிக்கவே ண்டியதைத் தாயிக்குக்கொடுத்து தாய்புசிக்கவேண்டியதை கியாபகப் பிசகால் தானருந்தி விருக்ஷங்களையும் அதற்கிணங்க மாத்திக்கொண்டார்கள் தான் கியாபகப் பிசகால் நடத்திவிட்ட விஷயத்தை உணர்ந்த ஸத்தியவதி பீதி யடைந்து கிலேசமுற்றவளாய் தனதுமாமனார் ஆசிரமம் சென்று நமஸ்கரித்து ஓ, ஸ்வாமி! கியாபகப்பிசகால் இவ்வண்ணம் மாறுதலையாக நடந்து விட்ட தென்று சொல்லி அழுதகண்ணும் சிந்திய மூக்குடன் இதற்கேதாகிலும் பரி காரஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்து கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். ரிஷி சிரேஷ்டர் கடுஞ் சினமடைந்து. ஓ, பெண்ணே! உனக் குதிக்கப்போகிற புத்திரன் க்ஷத்ரிய ஆசாரங்களை யடைந்து குரூரசித்தனாயிருப்பான். உன்தா யிக் குதிகப்போகிற புத்திரன் தபசிரேஷ்டனாயும் மஹாசாந்தசத்குணமுடைய வனாய் பிரகாசிப்பான். என்று முனிநாதர் சொன்ன உடனே திரேகம் நடுங்கி ஸத்யவதி அவர் பாதம் பணிந்து கண்ணீரால் அவர்பாதங்களை ஸ்நானஞ் செய்வித்து கண்மலரால் அர்ச்சித்து எழுந்து நின்று மறுபடியும் நமஸ்கரித்து கைக்கட்டி வாய்ப் பொத்தி. ஓ, ஸ்வாமி பேதைசெய்த பிழையை க்ஷமித்து தயைகூர்ந்து என்புத்திரனுக்கில்லாமல் எனது பௌத்திரனுக்கு க்ஷத்திரிய ஆசாரம் உண்டாகும்படி தாங்களனுக்கிரகிக்க வேணுமென்று மிகவும் வணக்

கமாய் பிரார்த்திக்க அப்படியே ஆகக்கடவதென்று அனுகிரகித்து அவ ஆச்ரமத்திற்கேகும்படி யனுப்பினர் அதுமுதல் இரு கர்பந்தரித்து ஸத் யவதி ஜமதக்கினியையும் அவள் தாயார் விச்வாமித்திர ன்று வழங்கு கௌசிகரையும் பெற்றள், ஜமதக்னி தாயாராகிய ஸத்யவதி தனைக் கண்டு களித்து முனிவரை தியானித்து அவருடைய கிருபையால் தான் கௌசிகநதியாகப் பிரவஹித்து லோகப்பிரவித்தியாய் ப்பவும் பிரகா சிக்கிருள், தாயிக்குதித்த கௌசிகர் பிதாவின் இராஜ்யத்தை பட்டாபி ஷேகஞ்செய்துகொண்டு கொஞ்சகாலம் ஆண்டு இல்லறவாழ்கையில் வெறுப் புற்று தவமே பெரிதென்று நிச்சயித்து மேலான தவஞ்செய்து பிரம்ஹரிஷி யாய் சஞ்சரித்தார். ஸத்தியவதி குமாரனுகிய ஜமதக்னியானவர் நாலுவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்திநன்கு கலைக்கியானம் மறுவிக்கியானம் மற்றுமுள்ள ஸகல சாஸ்திரங்களையும் கற்றறிந்து தவவிரேஷ்டராய் விந்தியம தென்திசையில் குணக்கடலுக்கு மேற்கே எழுயோசனை தூர விருக்கி ஜவ்வாதுமலை சுரங்கத்தில் தன்னுடைய ஆச்ரமமேற்படுத்திக்கொண்டு தவஞ் செய்தாரென்று சொல்லி, வஸிஷ்டமகாமுனிவர் விவஸ்வான் ராஜனைப்பார் த்து மறுபடியும் சொல்லத் தொடங்கினர்.

-வது அத்தியாயம் முற்றிற்று.

௩-வது அத்தியாயம்.

கேளும், ராஜனே கிருதயுகத்தில் விதர்ப தேசமென்றொரு தேசமுண்டு அதையாண்டு கொண்டு வந்த பிரஸேன சித்தனென்றும், ரைவதனென்றும் இரண்டு நாமங்களையும் வகித்து கீர்த்திவந்தனுய் தர்மவழுவில்லாமல் புலியும் பசுவும் ஓர் துறையில் நீரருந்தும்படி செங்கோல் நடாத்தி ரேணுவென்கிற பட்டமகிஷியோடு ராஜ்யபரிபாலனஞ் செய்துகொண்டுவந்தான். அப்படிக்கி ருக்க தனக்கு புத்திரஸந்தான மில்லாததால் ஏக்கமுற்று பெரியோர்களை வணங்கி அவர்களனுக்கிரஹத்தால்பற்பலயாகங்களைச்செய்தும்அனேகவிரதங் களை அனுஷ்டித்தும் தம்பதிகள் ஒரேமனதாய் வந்ததின் பேரில் தெய்வானு கூலத்தால் ஒருபுத்ரி யுதித்தாள். இருவருங்களித்து அப்புதல்விக்குரேணுகை என்று நாமந் தரித்து மிகச் செல்வமாய் வளர்த்து வந்தார்கள் அச்சிறுமி நாளொருமேனியும் பொழுதொருவண்ணமாக வளர்ந்துவந்தாள். ரேணுதான் கர்ப்பவதியானதும் பராசக்தி தன்னுடைய சொப்பனத்திற்ருேன்றி தன்னு டைய அம்சமாக ஒரு ஸ்திரீ பிரஜை உதிக்கப்போகிற தென்று திருவாய் மலர்ந்தருளிய சொற்களைச் சிந்தித்து தன்னுடைய சொப்ன விவரத்தை பர்த் தாவுக்கும் அறிக்கையிட்டு அதுமுதல் ஆனந்தசாகரத்திலாழ்ந் திருந்தார்கள்.

அப்படிக் கிருக்க ரேணுகை யென்கிற செல்வ குமாரி உசிதமான குணாதிசயங்களையும் மஹிமையையும் எனக்குத் தெரிந்தவரையில் சொல்லுகிறேன் கேளும் விவ... ராஜனே! என்று வஸிஷ்ட மஹாமுனிவர் சொல்லத் தொடங்கினு. கேளும் அரசனே! ஸச்சிதானந்த நித்ய நிர்மல மென்கிற பஞ்சலக்ஷணங்களினுலே மனோகரமாகிய பரபிரம்ஹத்தினிடத்தில் அமல ஸத்வஸ்வ பாவத்தினுலே அபின்னமாய் அக்னியினிடததில் உஷ்ணப் பிரகாச ரூப சக்தி பிரகாசிக்கிறதுபோல கூடிக்கொண்டு மலின ஸ்த்வ ஸ்வபாவமுள்ளவளாய் லக்ஷ்மி, பார்வதி, ஸரஸ்வதி, யென்கிற மூன்று ரூபங்களையடைந்து ஸ்வகீயம...ிய ஸாத்வீக, ராஜஸ, தாமஸங்களினுலே, சகுண பிரம்ஹா முதல் அ...வரைக்கும் இருபத்தேழு பேதங்களாகிய பிராணிகளை சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம், அனுக்கிஹம் என்கிற ஐந்து ...ய பே...ள அந்த பிரம்ஹமே செய்வதாகக் காண்பிப்பவளாயும்; ஞானிகளு...ய உள்ளத்தில் ...க்கப்பட்டவளாயும் ஸகல வஸ்துவினிடத்திலும் ரமிக்கப்பட்டவளாயு மாகிய பரா...தி, மஹம்மேரு பர்வதத்தில் பிரகாசிக்கிற ஸ்ரீ சக்கரபுரத்தில் வசிக்கிற...வியாகிய பராசக்தியானவள் தன்னுடைய பக்தர்களிடத்தில் வைத்த க்ருபையி...லே ஸகல ஜீவர்களையும் தன் ஸேவையினுலே இஹபர சுகங்களைக் ...க்க எண்ணங்கொண்டவளாய் ஜம்பூத்வீபத்தில் விதர்ப்ப தேசாதிபதியாகிய ரைவத ராஜனுக்கு தனது அம்சத்தில் ஒரம்சமாகிய ரேணுகாதேவி யென்கிற நாமம் வகித்து புத்ரியாக ஜனித்தவள். இப்பேர்ப்பட்ட மஹிமை வாய்ந்த அந்த ரேணுகை தன்னுடைய தாய் தந்தைகளிடத்தில் தன் யௌவன திசைவரையில் வளர்ந்து வந்தாள் என்று சொல்லி பின்னும் அவருடைய பிரதாபத்தை அரசனுக்குச் சொல்லத் தொடங்கினுர்.

௩-வது அத்தியாயம் முற்றிற்று.

௪-வது அத்தியாயம்.

கேளும். அரசனே! அதற்குமேல் ரேணுகையானவள் தனக்கு யௌவன திசை வந்ததால் விவாகஞ் செய்து கொள்ளவேண்டு மென்கிற எண்ணம் வகிக்கவளாய் தன் அந்தப்புரத்தி னின்று மாதா பிதாக்களிருக்கு மிடஞ் சென்று அவர்களை வணங்கி பிதாவைப்பார்த்து, ஒ! தந்தையே, எனக்கு யௌவ வனம் வந்ததால் எனக்குத் தகுந்த நாயகனை நானே தேடிக் கொண்டு வருகிறேன் என்று சொல்லி நமஸ்கரித்து தனக்கு சதுரங்கபல சைனியங்கள் ஸகாயமா யனுப்ப வேணுமென்று கேட்க அதற்கவர் நவமணியினும் அரிய குணமணியாகிய எனது கண்மணியே, ஞானமணியாகிய உன்னை

யனுப்பி விட்டு நான் எவ்வண்ணம் இருப்பேன். ஆகையால் நீ போகவேண்டுவதில்லை. சகல குணங்களும் வாய்ந்த ஓர் மஹா புருஷனை நானேபோய் கொண்டுவருகிறேன். அதுகாரும் நீ உன்னுடைய மாதா ... த்தில் சௌக்யமாய் இருந்துகொண்டிரு என்று பிதா சொன்ன வார்த்தையைக் கேட்ட ரேணுகா தேவியானவள் கடுஞ்சினங் கொண்டவளாய் பிதாவை வணங்கி என் மனதிற்கிஷ்டமான புருஷனை நானே பார்த்து வரவேணும். தாங்கள் பார்த்து வந்தால் சம்மதப்படேன். ஸைன்யங்களை எனக்கோர் துணையாக அனுப்புகிறீர்களா இல்லையா? என்று மூர்க்கமாய்க் கேட்ட புத்ரிக்கு உன்னிஷ்டப் பிரகாரம் நீயே போய் தேடிக்கொள் என் ... நானமணியே, என்று சில பிரிய வசனங்களைச் சொல்லி சந்தோஷிக்கச் செய்து உடனே காலதாமஸமின்றி சதுரங்க பல ஸைனியங்களை வந்து சேரும்படி ஆக்யாபித்து புத்ரியுடன்கூட்டி உன்னுடைய இஷ்டப்பிரகாரம் நற்கணவனை அடைவாய் என்று ஆசீர்வதித்து அனுப்பினார். ரேணுகா தேவியானவள் சதுரங்க பல ஸைனியங்களையும் திரட்டிக்கொண்டு தன் ராஜ்யம் விட்டு புறப்பட்டு காடு, மலை, வனம், வனாந்திரங்கள் கடந்து அனேக ... ங்கள் திரிந்து பார்த்து, தன் மனதிற்கு ஏற்ற புருஷன் ஒருவரும் அகப்படாததால் வனங்களில் பிரவேசித்து ஆச்ர... ... ங்களும் பார்த்து ... ண்டு வரும்போது ஜவ்வாது மலைக்கருகில் வந்து சேர்ந்து அவ்விடத்தில் கொஞ்சம் சிரம பரிகாரஞ் செய்து கொண்டு இருந்தனள் அப்படிக்கிருக்க அச்சமயத்தில் ஓர் பேரொலி மொழக்கம்போல் ஓர் தொனியைக்கேட்டு வியந்து கவனிக்க, ஓ! ரேணுகாதேவி, இந்த ஸ்தளத்தில் ஜமதக்னி ரிஷியானவர் தவஞ்செய்து கொண்டிருக்கிறார். அந்த ரிஷி சிரேஷ்டரானவர் உனக்குப் பதியாகப் போகின்றார். இது நிச்சயம்! நிச்சயம்!! என்றும் சொன்ன அசரீரி வாக்கை கேட்ட உடனே நடுக்கடலில் திசை தப்பித் தியங்கும் ஓர் மாலுமிக்குக் கரைத்தோன்றினாற்போலும், பிறவிக்குருடனுக்கு பார்வை வந்ததுபோலும் மலடி பிள்ளை பெற்றதுபோலும் திரேகம் பரவசமடைந்து மயிர்க்கூச்செறிந்து விழிகளில் ஆனந்த பாஷ்பம் தாரதாரையாகச் சொரிய அதிக சந்தோஷ சித்தத்தையுடையவளாய் ஜமக்னி மஹா ரிஷியை தரிசனஞ் செய்யும் பொருட்டு அவர் ஆச்ரமம் செல்லக் கருதி தன்னுடன் வந்த சதுரங்க பல ஸைனியங்களையும் அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு தான்மாத்திரம் சென்று ஆச்ரமத்தைக் கண்டு தரிசித்து யாதொன்றும் தோன்றாலும் ஆச்ரமத்திற்குள் பிரவேசிக்க வழி தெரியாமலும் தியங்கி மதிமயங்கி அங்ஙனே நின்று கொண்டிருந்தாள்.

௪-வது அத்தியாயம் முற்றிற்று.

ரு-வது அத்தியாயம்.

கேளாய் ராஜோத்தமா! அந்த ஆச்ரமத்திற்கு நாற்புறமும் நாலு வேதங்கள் பா[illegible]காத்துக்கொண்டிருக்கின்றன. அனேக ரிஷிகள் தங்கள் சிஷ்யர்யர்களுடன் ய[illegible]கங்கள் செய்துகொண்டும் அதனுல் உண்டாகிய அவிர்ப்பாகங்களை தேவதைகளெல்லாம் தங்களிஷ்டப் பிரகாரம் புஜித்துக்கொண்டு சந்தோஷ சித்தர்களாய் இருக்கிறதும் அவ்வன முழுதும் சதா காலமும் புஷ்பங்கள் புஷ்பித்துக்கொண்டும் காய்கனிகள் காய்த்துக்கொண்டிருக்கிறதும் மிருகாதிகள் ஒன்றுக்கொன்று விரோதமில்லாமல் அன்யோன்யமாய் விளையாடிக்கொண்டிருப்பதும் பக்ஷி ஜாதிகள் காய் கனிகளைத் தின்று கொண்டு [illegible]த்து பாடிக்கொண்டிருக்கிறது. வண்டுகள் புஷ்பங்களிலிருந்து சொரியும் தேனை[illegible]ண்டு [illegible]ங்காரஞ் செய்துகொண்டிருக்கிறதும் இப்பேர்க்கொற்ற சுலக்ஷணங்க[illegible] வாய்ந்து நிறைந்திருக்கிற அவ்வாச்ரமத்தை பாதுகாத்துக்கொண்டிருக்கிற கீழ்த்திசை வேதம[illegible] என்பது தன்னருகில் நிற்கின்ற ஓர் யௌவனப் பருவமுள்ள ஒரு ஸ்தி[illegible]யையும் அவளுடன் வந்த சதுரங்கபல சைனியங்களையும் கண்ணுற்று ஏதோ ஆ[illegible]த்திற்கு அபாயம் சம்பவிக்கும் என்று கருதி விரைவாக ஆச்ரமத்துக்குள் [illegible]து ஜமதக்னியிடஞ் சென்று ஓ, ரிஷி சிரேஷ்டரே! கீழ்த்திசையில் யாரோ ஒரு யௌவன ஸ்திரீயானவள் சதுரங்கபல சைனியங்களுடன் வந்திருக்கிருள். என்று சொன்னதைக்கேட்ட ரிஷியானவர் கோபங்கொண்டு தன் சிஷ்யர்களை அழைத்து, ஓ, சிஷ்யர்களே! நீங்களனைவரும் இந்த பிரம்ஹ தண்டத்தை எடுத்துக்கொண்டு போய் அவர்களுடன் யுத்தஞ்செய்து வென்று, அந்தப் பெண்ணை மாத்திரம் என்னிடம் அழைத்துக்கொண்டு வாருங்கள் என ஆக்யாபித்து பிரம்ஹ தண்டத்தையும் அவர்கள் கையில் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்ட சீடர்க ளனைவரும் விரைவாய்ப் புறப்பட்டு ரேணுகா தேவியினுடைய சைனியத்திற் கெதிரில் வந்து நின்று கொண்டார்கள்.

ரு-வது அத்தியாயம் முற்றிற்று.

சா-வது அத்தியாயம்.

கவனியும் அரசனே! இந்த இருதிறத்தாருடைய சைன்னியங்களும் ஸந்தித்த விடத்திற்கு ஸந்தித்வாரமல்லது ஸந்திவாசலென்றும் இப்பவும் வழங்கி வருகின்றது. முதலில் ரிஷியின் சிஷ்யர்கள் தங்களிடத்திலிருந்த பிரம்ஹ தண்டத்தை யெடுத்து ரேணுகா தேவியினுடைய சைன்னியத்தின் பேரில் பிரயோகித்தார்கள். மஹ ரிஷியினுடைய மஹத்துவத்தால் அத்தண்

டத்திலிருந்து ரதங்கள், யானைகள், குதிரைகள், பதாதிகள் என்கிற சது ரங்கபல ஸைனியங்களும் தங்களாயுதங்களுடன் ஒன்றன்பின்ஒன்று தோன்றி அனேக விதமான மாயா யுத்தங்கள் செய்கிறதை தேவியானவள் பார்த்து தன்னுடைய சேனைகளையும் அவர்களோடு போர் புரியும்படி உத்தரவு கொடுத்த உடனே, இருஷிபுத்தாருடைய ஸைனியங்களும் ஒன்றுக்கொன்று அபரிமிதமான யுத்தஞ் செய்து சின்னாபின்னமாய் அடிபட்டு தேவியினுடைய ஸைனியம் குறைந்து விட்டதையும் அடிபட்டோடுவதையும் கண்ணோக்கிய ரேணுகாதேவி ஆச்சரியப்பட்டு தன்னருகிலிருந்த சாமுண்டியைப் பார்த்துச் சொல்லுகிறாள். ஓ! சாமுண்டி, நீ இந்த ஸைனியங்களையும் ரிஷி சிஷ்யர்களையும் ஹதஞ்செய்து விடு என்று ஆக்யாபிக்க அவ்வுத்திரவைக் கைக்கொண்ட சாமுண்டியானவள் மஹா கோபா வேசங்கொண்டு அபரிமிதமான யுத்தஞ் செய்தும் சாத்தியப் படாமல் கடுஞ்சினங்கொண்டு தன்னுடைய நெற்றிக் கண்ணினால் எதிர்த்த ஸைனியங்களனைத்தையும் எறித்துவிட்டாள். அதைக் கண்ட ரிஷியின் சிஷ்யர்கள் ஓடோடியும் போய் ஜமதக்னி மஹா ரிஷியினிடத்தில் முறையிட்டார்கள். உடனே ரிஷி சிரேஷ்டர் தன்னுடைய கமண்டலத்திலிருந்து தீர்த்தசாகரத்தை அனுப்பி சாமுண்டியின்நெற்றிக்கண்ணை அவித்து விடும்படி ஆக்யாபித்தார். அவ்வாக்யயை சிரமேற்கொண்டு கங்கை அதிவேகமாய் கோஷத்துடன் பெருகி சாமுண்டியின் நெற்றிக்கண்ணாகிய அக்னியை பொட்டென அவித்து விட்டது. ரிஷியின் கமண்டலத்திலிருந்து பெருகியதால் அந்நதிக்கு அது முதல் கமண்டல நதியென்று மகிமையுள்ள தீர்த்தமாய் இப்பவும்பெயர்வழங்குகிறது.

சு-வது அத்தியாயம் முற்றிற்று.

எ - வது அத்தியாயம்.

உடனே ரிஷியானவர் சிஷ்யரைப்பார்த்து நீங்கள் இந்த புஷ்பமாலையை எடுத்துக் கொண்டுபோய் அந்தசாமுண்டியின் மேல் போட்டு கட்டியிழுத்துக் கொண்டுவந்து இந்தவனத்திலேயே ஸ்தாபனஞ்செய்துவிடுங்களென்று உத்தரவு கொடுத்தனுப்பினார். ரிஷிஉத்திரவின்படிசிஷ்யர்கள் அந்தபுஷ்பமாலையை எடுத்துக் கொண்டு சாமுண்டிதேவியினிடம் வந்து அவள்மேல் போட்ட மாத்திரத்தில் சாமுண்டியானவள் யாதொன்றும் தோன்றாமல் நின்று விட்டாள். ரிஷிசிஷ்யர்கள் அவளைக் கட்டி இழுத்துக்கொண்டுபோய் கமண்டல நதிகரையில் ஸ்தாபனஞ் செய்துவிட்டார்கள். அதுமுதல் சாமுண்டிதேவி ஆலயம் ஒன்று அந்நதிக்கரையில் இப்பவு மிருக்கிறது. அதற்கே புஷ்பபுரி யென்றும் சொல்லுகிறார்கள். பின்னர் ரேணுகையானவள் சா

மு...டியை இழுத்துக் கொண்டு போனதை முன்னிட்டு மிகவும் துக்கப்பட்டு அருகிலிருந்த தன் சகியைப்பார்த்து ஓ! ஸகியே! இதென்ன ஆச்சரியம். இந்த ...த்திலிருக்கிற ...யோர்கள் மகிமை தங்கிய மஹான்களா யிருக்கிறார்கள் ந... ...ன் மேல் யுத்தஞ் செய்யக் கூடாதென்று ஆலோசித்து யுத்தத்தை நிறுத்தி விட்டு நாமிருவருமாத்திரம் அங்குபோய் அந்தரிஷியை விவாகஞ் செய்து கொண்டு வருவோம் வாயென்று அழைத்துக் கொண்டு மிதுனமாசம் ...கா நக்ஷத்திரத்தில் ரிஷியின் ஆச்ரமத்தைக் குறித்துப் போனார்கள். அது முதல் சேனையை நிறுத்திய விடத்திற்கு சேனுஹதம் என்று விளங்குகிறது. ரிஷியின் ஆச்சிரமத்திற்குள் போகும்போது சமீபத்திலிருந்த ரிஷிசிஷ்யனுகிய அதிரதவீரனை அலக்ஷயஞ் செய்துரிஷியின் சமீபத்திற்குப்போனபோது சிஷ்யனுக்கு கோபம் பிறந்து தர்பைகளினுலே குண்டலாகாரமாய் செய்து ரேணுகையின் பேரில் போட்டான் தக்ஷணம் ரேணுகாதேவி யாதொன்றும் தோனுமல் திகைத்து நின்று ஞானதிருஷ்டியினுல் யோசித்துப் பார்த்துட மருகவாத்ய மெடுத்து மொழங்கிக் கொண்டே ரிஷி எதிரிலிருக்கிற அக்கினி குண்டத்தைத் தாண்டி ரிஷியருகில் நின்முள். அதுமுதல் அந்தயிடத்திற்கு குண்டலீபுரமென்று பெயர் பெற்று இப்பவும் விளங்குகின்றது.

எ-வது அத்தியாயம் முற்றிற்று.

அ-வது அத்தியாயம்.

ஜமதக்னி மஹாரிஷியானவர் தன்னெதிரிலிருந்த அக்கினி குண்டத்தைத் தாண்டிவந்து தன்னருகில் நின்ற ரேணுகா தேவியைபபார்த்து தன் கையிலிருந்த தர்பை புக்களால் அவளைத் துறத்திக் கொண்டோடி ஈசான்ய திசையில் ஓரிடத்தில் இருவரும் நின்றார்கள். அப்போது ரேணுகா தேவியானவள் ஒருபுற்றினிடத்தில் புகுந்து மறைந்தாள். அதைப்பார்த்திருந்த ரிஷியானவர் இதென்ன மாயமாய் இருக்கிறதென்று சிந்தித்துக் கொண்டிருந்த சமயத்தில் புற்றில் புகுந்த ரேணுகையானவள் தன் திரேகத்தை யிரண்டு ரூபமாக தோன்றும்படியாய் மாயை செய்து ஒன்று சிலா ரூபமாகவும் மற்றொன்று சௌந்தரியமுள்ள ஓர் கட்டழகியாகவும் தோன்றி நின்றாள். ரிஷி சிரேஷ்டர் அக்கட்டழகியைக் கண்டு களித்து. ஓ! பெண்ணரசே! நீ யார்? உன்பெயர் என்ன? உன் விருத்தாந்தங்களை ஸவிஸ்ததரமாய் சொல்லென்று ரிஷியானவர் கேட்க ரேணுகாதேவி அவருக்கு ஸாஷ்டாங்க நமஸ்கரித்துச் சொல்லுகிறாள். ஓ! ரிஷிசிரேஷ்ட்டரே எனதுவரலாற்றை சாங்கோபாங்கமாய் சொல்லுகிறேன், தயை கூர்ந்து கேட்டருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டு சொல்லத் தொடங்கினாள். பிரபோ, நான் விதர்ப்பதேசாதிபதியாகிய ரைவதரா ஜனுடைய ஏகபுத்ரி, என்பெயர் ரேணுகாதேவி, நான்

விவாகஞ் செய்துகொள்ள எண்ணங்கொண்டவளாய் எவ் தந்தையினிடத்தில் உத்திரவு பெற்றுக்கொண்டு எனக்குத் துணையாக அநேக சதுரங்க பல ஸைனியங்களோடு புரப்பட்டு அனேகயிடங்களில் ...ற்குரிய நாயகனைத் தேடித் திரிந்து இது காறும் என்னிஷ்டப் பிரகாரம் ஒருநாயகன் கிடைக்காமல் பலவாட்டத்துடன் வனஸஞ்சாரஞ் செய்து வருகிறகாலத்தில் ஆகாயவாணியினுல் தாங்கள் எனக்குப் பதியாவீர்கள் என்று சொல்லிய வசனங்களைக் கேட்டு தங்களுடைய ஆச்ரமம் வந்து தங்களை விவாகஞ் செய்து கொள்ள வேணுமென்கிற எண்ணங் கொண்டவளாய் தங்களிடத்திற்கு வந்தேன். பிரபோ, தாங்கள் அடியாள் பேரில் தயை கூர்ந்து பாணிகிரகணஞ் செய்து கொள்ள வெண்டுமென்று பிரார்த்தித்து நின்றுள்.

ரு-வது அத்தியாயம் முற்றிற்று.

சு-வது அத்தியாயம்.

அவள் மொழிகளைக் கேட்ட ரிஷியானவர் கோபங்கொண்டு ஓ! பெண்ணே! நீ என்னை இன்னுறென்றறியாமல் இவ்வளவு அலைத்தலைக் கொடுத்தமையால் உனக்கு சண்டாள திரேகம் உண்டாகக் கடவதென்று சபித்துதன் ஆச்சரமத்தை நாடிச் சென்றுர். ரேணுகாதேவி அதிக பீதியடைந்து ரிஷியின் பின் தொடர்ந்து மறுபடியும் டமறுகவாத்யத்தை எடுத்து பக்தி விஸ்வாஸத்துடன் மொழக்கிக் கொண்டு சென்றுள். அவ்வனத்திலுள்ள அனேகதவசிரேஷ்டர்கள் இவ்வாத்ய ஒலியைக் கேட்டு ஆச்சரிய மடைந்து களிப்படைந்தார்கள். யாவரும் தேவருந் வியக்கும்படி வாத்ய முழங்கஞ் செய்து கொண்டு பின் தொடர்ந்து வருகிற ரேணுகாதேவியை தவசிரேஷ்டர்களாகிய ஜமதக்னி மஹாரிஷி குதுலகத்துடன் நின்று அவளைத் திரும்பிப்பார்த்து, ஓ, பெண்ணே, நீ இப்போ தெதைக்குறித்து வருகிருய் சொல் என்று கேட்க ஸ்வாமி, என்று வணங்கி அடியாளுடைய சண்டாள சாபத்தைப் போக்கி தாங்க ளென்னை விவாகம் செய்து கொள்ளும்படிக்கு மிகவும் பிரார்த்திக்கின்றேன் என்று சொல்லிக் கொண்டே அடியற்ற மறம்போல் அவர் பாதத்தில் விழுந்து அழுதாள். ரிஷியானவர் 'ஓ' ரேணுகே, என்வாக்கில் வந்த சொல் வீணுகாது. ஆகையால், நீ, கேட்டுக்கொண்ட பிரகாரஞ் சிலகாலத்திற்குப் பிரகு ஒரு காரணத்தால் உனக்கு சண்டாள ரூபம் வரப்போகிறது அப்போது பரமசிவன் அனுக்கிரஹத்தில் சண்டாளத்வம்மாறி உனக்கு இரண்டு ரூபம் உண்டாகும். ஒரு ரூபத்தோடு என்னை யடைந்துவிடுவாய் மற்றொன்று மாயாசக்தி ரூப முண்டாகி அந்த ஸ்வரூபத்தால் அண்ட பிண்ட சராசரங்களி லுள்ள ஜீவ கோடிகளை ரக்ஷித்துக்கொண்டு கீர்த்தி வகித்து இருக்கப்போகிருய் ஆனதால் உன்மனக்லேசத்தை நீக்கிக்கொண்டு என்னை

விவாகஞ் செய்துகொள், பயப்படாதே, வியாகூலப்படாதே, என்று அனேக வசனங்களால் அவளை சந்தோஷிப்பித்து அந்த ரேணுகாதேவியை தான் பாணிகிரகணஞ் செய்துகொள்ள நிச்சயித்துக் கொண்டார்.

கூ-வது அத்தியாயம் முற்றிற்று.

௧0-வது அத்தியாயம்.

பிறகு ரேணுகா தேவியானவள் ரிஷியை நமஸ்கரித்து தன் பிதாவிடஞ் செல்ல விடைபெற்றுக் கொண்டு தன் பிதாவாகிய ரைவத ராஜனிடம் வந்து நமஸ்கரித்து வணங்கி 'ஓ' தந்தையே! எனக்குத்தகுந்த நாயகனைத் தேடிக் கொள்ளும் நிமித்தம் அனேக தேசங்கள் சஞ்சரித்து கடைசியாக ரிஷிசிரேஷ்டர்கள் தவம்புரியும்படி பாகிய வனங்களுட் சென்று அனேக ஆச்ரமங்களையும் ரிஷிகளையும் தபோதனர்களையும் தரிசித்துக்கொண்டு ஜவ்வாது மலைச்சாரிபில் வந்து தங்கியபோது அங்கு ஆகாசவாணி 'ஓ' ரேணுகா, இது ஜமதக்னி மஹா ரிஷியின் ஆச்ரமம் அந்த மஹானுபாவரே உனக்குரிய நாயகன் இது நிச்சயம், நிச்சயம் என்று பலுக்கிறுள். அவ்வசனங்களைக் கேட்டயான் அவர் ஆச்ரமம் சென்று என் கண்குளிர அவரை தரிசித்து என்னை விவாகஞ் செய்து கொள்ளும்படி கேட்டுக்கொண்டு அவர் சம்மதத்தின் பேரில் விடைப்பெற்று தங்களிடம் வந்தேன் என்றுள். அதைக்கேட்ட ராஜன் மிகவும் சந்தோஷமடைந்து தனது செல்வக்குமரியை கட்டித் தழுவி முத்தமிட்டு உச்சிமுகந்து அவள் முகத்தைப் பார்த்து என் கண்மணி, நான் எடுத்துக்கொள்ள வேண்டிய பிரயாசை யனைத்தையும் நீயே எடுத்துக் கொண்டு உனக்குத் தகுந்த நாயகனைத் தேடிக்கொண்டாயே, என் செல்வமே, என் கல்விக்களஞ்சியமே, ஞானரத்ன மணியே, நவமணியிலும் அரிய குணமணியே என் கண்மணியே, இப்பூவுலகின்கண் மஹிமை தங்கிய கீர்த்தி வகித்து வாழக்கடவாய் என் றாசீர்வதித்து குழந்தையை அந்தப்புரத்துக்கு அவள் தாயினிடம் அனுப்பிவிட்டு தன்னுடைய மந்திரி பிரதானிகளை வரவழைத்து அமைச்சர்களே, என்னுடைய குழந்தை ரேணுகா தேவிக்கு விவாக காலம் சமீபத்து விட்டது. இனி தாமதிக்கக் கூடாது இப்போதே நீங்கள் ரிஷிசிரேஷ்டர்களுக்கும் மற்று முள்ள தபோதனர்களுக்கும் சப்பன்ன தேசத் தரசர்களுக்கும் ஜமதக்னி யாச்சரமம்வந்து சேரும்படிவிவாக பத்ரிகை வரைந்தனுப்ப உத்திரவளித்து ஸேனாதிபதிகளை வரவழைத்து விவாகத்துக்கு வேண்டிய சாமான்க ளனைத்தையும் ஜாக்கிரதை செய்துகொண்டு நல்ல சுபமுகூர்த்த வேளையில் சதுரங்கபல ஸைனியத்தோடும் பந்த மித்ர வர்க்கங்களுடன் தன் குழந்தை ரேணுகையை ஸகல ஆபரணங்களால் அலங்கரிக்கச் செய்து தந்நகர் விட்டு புறப்பட்டு காடு, மலை, வன, வனாந்தரங்களைக்

கடந்து மருநாள் உதயத்துக்கெல்லாம் நமதக்னி ரிஷியின் ஆச்ரமத்திற்கு சமீபத்திற்போய் இறங்கிவிட்டார்கள். இதன் மத்தியில் ஜமதக்னி ரிஷியானவர் தனது பிதா மஹராகிய பிருகுமஹா ரிஷிக்கும் தனது பிதாவாகிய ருசிக மஹா ரிஷிக்கும் தெரியப்படுத்தி அவர்க ளிருவரையும் வரவழைத்து நமஸ்கரித்து நடந்த வரலாற்றைக்கூறி தனக்கு விவாகத்தை நடத்தி வைக்க வேணுமென்று சொல்லி பிரார்த்திக்க, அவர்க ளிருவரும் களிப்படைந்து அப்படியே உன்னிஷ்டப் பிரகாரம் முகூர்த்தத்தை நடத்தி விடுவோமென்று ஆசிர்வதித்த இந்திரன் முதலான தேவர்கள் அனைவர்க்கும் தெரியப்படுத்தி மயனென்கிற தேவ விச்வ கர்மாவை வரவழைத்து ஓ, மயனே! நீ இந்த ஆச்ரமத்தில் முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் அஷ்ட வசுக்கள், கின்னரர், கிம்புருடர், சித்த வித்யாதரர். மற்றும் பெரியோர்களும் சப்பன்ன தேசத்தார்களும் தங்கும்படிக்குஅவாளவாளுக்குத் தகுந்தபடி நவரத்ன கசிதமாய் தெய்வலோகம்போல சீக்கிரத்தில் நிர்மாணஞ் செய்து விடென்று உத்திரவு அளித்து மேற்சொன்ன தேவர்க ளனைவர்க்கும் பிருகுமகா ரிஷியானவர் தமது பௌதரனாகிய ஜம்தக்னியின் விவாகத்தை தெரியப்படுத்தி வரவழைத்து அவரவர்களுக்குத் தகுந்த ஆச்ரமங்களைக் கொடுத்து கர்ப்பகவிருக்ஷம், காமதேனு, இந்திரமணி முதலானவர்களைக் வரவழைத்துக்கொண்டு, வந்தவர்கள் அனைவரோடும் நல்ல முகூர்த்த வேளையில் புறப்பட்டு சம்பந்திகளாகிய ரைவதராஜன் முதலானவர்களை எதிர்கொண் டழைத்துவந்து தன்னுடைய ஆச்ரமத்தில் அவர்களுக்குத் தகுந்த விடுதிகளில் இறங்கச் செய்து உபசரித்தார். அதற்குமேல் நல்ல சுபலக்னத்தில் பிரஹஸ்பதி பகவான் ஆசாரியரா யிருந்துகொண்டு காச்யபர், வஸிஷ்டர், ஜாபாலி, அத்ரி, பரத்வாஜர், கௌண்டின்யர், முதலான ரிஷி சிரேஷ்டர்களை கல்யாண மண்டபத்தில் ஆசனங்கள் கொடுத் துட்காரவைத்து, இந்திராதி தேவர்களும், அனேக ரிஷி சிரேஷ்டர்களும், தபோதனர்களும், பிராம்மணோத்தமர்களும், பிராஹ்மண ஸுமங்கலிகளும், சூழ்ந்துகொண்டு வேத கோஷங்களும் முப்பத்திரண்டு வாத்தியங்களும் மொழங்குகையில், ரேணுகா தேவியின் பிதாவாகிய ரைவதராசன், ஆசாரியரைக்கொண்டு புண்யாஹ வாசனாதி சுபக்கிரியைகளைச் செய்வித்து, கன்னிகாதான சமயத்தில் பிராஹ மணோத்தமர்களுக்கு கோதான பூதான முதலான தானங்களை யதேஷ்டமாய்க்கொடுத்து தன்னுடைய குமாரியாகிய ரேணுகையைஸ்னானம் செய்வித்து ஸர்வ பூஷணாலங்கிரிதியாக்கி புஷ்பந் தரித்து கண்டத்தில் புஷ்ப மாலையிட்டு ஜமதக்னி ரிஷி சிரேஷ்டராகிய வரனுக்கு அர்க்கிய பாத்ய ஆசமனியங்களால் உபசரித்து ஸர்வோபசாரஞ் செய்து தனது குமாரத்தி ரேணுகாதேவியை கன்யாதானஞ் செய்தார். அதைப் பெற்றுக்கொண்ட ஜமதக்னி ரிஷியானவர் மஹா சந்தோஷசித்தராய் மாங்கலியத்தைக் கரத்தில் எடுத்துக்கொண்டு இந்திராதி தேவர்கள் ஸன்னிதானத்தில் தும்புரு நார

தர் முதலானவர்கள் கானஞ் செய்யவும், ரம்பை, மேனகை, ஊர்வசி, திலோத்தமை, முதலான தேவதாஸ்திரீகள் நாட்டியமாட, கந்தர்வர், கின்னரர், கிம்புருஷர், ஸித்த வித்யாதாரர், முதலானோர்கள் புஷ்பமாரி பெய்யவும் .. பிராஹ்மனோத்தமர்கள் வேதமோதி மங்களாசீர் வசனங்களுடன் ரேணுகா தேவியின் கண்டத்தில் மாங்கல்யத்தை ஜமதக்னி ரிஷிதாரணஞ்செய்தார். பிராஹ்மணஸ்திரீகள் நவரத்னாலங்கார தீபங்களைக் கொண்டு திரிஷ்டி கழித்து மங்களம் பாடினார்கள். இச்சுபமுகூர்த்தம் முடிந்ததும் பிராஹ்மனோத்தமர்களுக்கும் மற்றுமுள்ள பெரியோர்களுக்கும் அவரவர்க ளபிப்பிராயப்படி விசேஷ மரியாதை செய்தார்கள். ஸமஸ்த தேவதைகளும் புஷ்பவருஷங்களை வருஷித்தார்கள். ஸகல ரிஷி சிரேஷ்டர்கள் தம்பதிகளை ஆசீர்வதித்தார்கள். பின்னர் அவரவர்களுக்குத் தகுந்த மரியாதைகளைச் செய்து சந்தோஷித்திருக்கும் சமயத்தில் அங்கு வந்திருந்த தேவதைகள், ரிஷிகள், அரசர்கள் முதலானவர்களும் பிருகு மஹாரிஷியினிடத்தில் விடை பெற்றுக்கொண்டு அவரவர்கள் இருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள். தானும் தனது குமாரராகிய ருசிகரும் ஜமதக்னி மஹா ரிஷிக்கும் அவர் பத்னி ரேணுகா தேவிக்கும் ஆசீர்வதித்து தங்களுடைய ஆச்ரமத்திற்கு போய்ச் சேர்ந்தார்கள்.

௧௦-வது அத்தியாயம் முற்றிற்று.

௧௧-வது அத்தியாயம்.

அவ்வளவு வைபவத்துடன் ஜமதக்னி ரிஷியானவர் தன் விவாகத்தை முடித்துக்கொண்டு மாமனார் முதலான பந்துக்களனைவரும் தங்கள் தங்கள் தேசத்திற்கு அனுப்பிவிட்டு தானும் தன் பத்னியும் சிஷ்யர்களுடன் தனது ஆச்ரமத்தில் யாகாதி கிருத்யங்களைச் செய்துகொண்டு வெகு கீர்த்திபெற்று அனேக வருஷம் குதூகலத்துடன் வாழ்ந்துகொண்டிருக்க ரிஷியின் மாமனாராகிய ரைவத ராஜன் தனக்கு புத்ரஸந்தான மில்லையென்று ஏக்கமுற்று தனது மருமகனாகிய ஜமதக்னி ரிஷியினிடத்தில் வந்து முறையிட்டதின் பேரில், ரிஷியானவர் மனமிரங்கி அனுக்கிரஹித்து சந்திரகேது வென்னும் குமாரனை பெறுவாயென்று சொல்லி யனுப்பினார். அனுக்கிரகம் பெற்றுக்கொண்டவுடனே ரைவத ராஜன் தன்னுடைய இருப்பிடம் வந்து தன் பாரியை ரேணுவுக்குத் தெரிவித்தார். சில நாளைக்கெல்லாம் ரேணுவானவள் கர்ப்பவதியாகிய சந்திரகேதுவென்னும் குமாரனைப் பெற்றாள். அந்த சந்திரகேதுவானவர் தன்பாலப் பருவத்திலேயே ஜமதக்னி ரிஷியினிடம் வந்து குருகுல வாசஞ்செய்து அனேக அஸ்திர, சஸ்திரப் பலங்களைப்பெற்றுக்கொண்டு திக்விஜயஞ் செய்து, மறுபடியும் பிதாவினிடம் வந்து சேர்ந்தார். அப்படி வந்த குமாரனை ரைவதராஜன் அபிமானித்து பிள்ளைக்கு பட்டாபிஷேகஞ்

செய்வித்து தான் தவத்திற் கேகினர். பட்டாபிஷேகம் பெற்றுக் கொண்ட சந்திரகேதுவானவன் தன்தமக்கை ரேணுகாதேவியின் அனுக்கிரஹத்தால் ஜமதக்னி ரிஷியின் ஆச்ரமத்திற் கருகில் குலிடலீநகர மென்று ஒருநகரத்தை நிர்மாணஞ் செய்து கொண்டு தானந்த நகரத்திலேயே வசித்துக்கொண்டிருந்து மருத்துவன் என்னும் குமாரனைப்பெற்று அவன்யௌவன திசையடைந்தவுடன் அவனுக்கு பட்டாபிஷேகஞ் செய்து தன் ராஜ்யத்தை அவன வசம் ஒப்பிவித்து தவத்திற் கேகினர். மருத்துவன் பிதாவாக்ஷ்ம் பிரகாரம் விதர்ப்பதேசத்தை யரசாண்டு கொண்டும் குலிடலீநகரத்தை பரிபாலித்துக் கொண்டும் சுகமாக வாழ்ந்திருந்தான்.

கக-அத்தியாயம் முற்றிற்று.

கஉ-வது அத்தியாயம்.

இப்படியிருக்க, ஜமதக்னி ரிஷியின் பத்னியாகிய ரேணுகா தேவியானவள் வெகுகாலங் கழித்த பிறகு, தனக்கு புத்ரஸந்தான மில்லாமையால் தன் பர்த்தாவிடம் வந்து நமஸ்கரித்து வக்கமுறை யெனதேரடி தனக்கு புத்ரஸந்தானம் உண்டாகும்படி அனுக்கிரகிக்க வேணுமென்று பிரார்த்தித்து நின்றாள். அப்படியே உண்டாகும் என்று ரிஷியாசீர்வதித்த சில நாளைக்கெல்லாம் அவருடைய கிருபா கடாக்ஷத்தால் கர்ப்பவதியாய் ருமதி, உச்சாகன், விஸ்வாவசு என்னும் நாமங்களையுடைய மூன்று குமாரர்களையும் பெற்று நாராயணம்சத்தை யடைந்த நான்காவது குமாரனாகிய பரசுராமனையும் பெற்றாள். இந்நான்கு குமாரர்களும் சுக்லபக்ஷ சந்திரனைப்போல் வளர்ந்துகொண்டு சூரியனைப்போல் தேஜோவந்தார்களாய் வேதங்கள் சாஸ்திரங்கள், தனுர் வித்தை முதலானதுகளில் தேர்ந்தவராய் பிதாவினிட மிருந்தார்கள். இவர்களில் கடைக் குமாரனாகிய பரசுராமனென்கிறவன் பிதாவிடஞ் சென்று நமஸ்கரித்து, ஓ! தந்தையே. நான் பரமசிவனைக் குறித்து தவம்புரிய செல்ல வேண்டுமென்று பிரார்த்தித்த குமாரனைப்பார்த்து அடா குழந்தாய், இப்பாலப் பருவத்திலேயே தவம்புரிய எண்ணம் ஜனித்தது. பகவானுடைய கிருபையே அப்படியே சென்று தபஞ்செய்யென்று ஆசீர்வதித்து அனுப்பினர். தந்தையினிடம் விடைபெற்றுக் கொண்ட ராமன் வனஞ்சென்று பரமசிவனைக்குறித்து அஹோரமான தவம்புரிந்து பரமசிவனனுக்ரஹத்தால் பரசு வென்கிற ஆயுதத்தைப் பெற்றுக்கொண்டு சிரஞ்சிவத்தையும் அடைந்து கீர்த்தியுடன் தவஞ்செய்துகொண்டிருந்தார். இப்படிக்கிருக்க, ரேணுகாதேவியானவள் தனக்கு விவாகம் நடந்தது முதல் நித்ய காலமும் ஆச்ரமத்துக் கருகிலிருக்கிற பத்ம ஸரஸ்ஸு வென்கிற தடாகஞ் சென்று ஸ்நானுதி நித்ய கர்மங்களை முடித்துக்கொண்டு ஆச்ரமம் வரும்போது தன்னுடைய இரண்டு

கரங்களால் ஜலத்தைத் திரட்டி யெடுத்துக்கொண்டு வருகிற வழக்கம்போல் ஒருநாள், தடாகஞ்சென்று ஸ்னானஞ் செய்து தன்னுடைய நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஜலத்தைத் திரட்ட தன் இரண்டு கரங்களையும் ஜலத்தில் நீட்டினாள். அப்போது ஆகாய மார்க்கமாய் சித்ர ஸேனனென்கிற ஒரு கந்தர்வன் சென்றான். அவனுடைய சாயலை ஜலத்தில் ரேணுகா தேவி பார்த்து இப்போர்க்கொற்ற வடிவுள்ள புருஷனும் உலகத்திலுண்டோ யென பிரமித்து நின்று, மறுபடியும் நீட்டிய கையால் ஜலத்தைத் திரட்ட கூடிய பிரயாசைப்பட்டும் நீர்த்தந் திரளாமல்போய்விட்டது. ஜலம் திரண்டு வராமையைக் கண்ட ரேணுகா தேவி பயந்து, நடு நடுங்கி, வருத்தப்பட்டுக் கொண்டு பர்த்தாவின் முன் வந்து நின்றாள். அப்படி நின்ற தன் பத்னியாகிய ரேணுகா தேவியின் பேரில் கோபமூண்டவராய், ஓ! ரேணுகா பூஜை வேளை தவறி வந்தது மன்றி தீர்த்த மில்லாமல் வந்த காரணமென்ன? சீக்கிரம் தெரியப்படுத்தென்று கேட்டவுடனே ரேணுகையானவள் நடு நடுங்கி நாவெழாமல் நடந்த தன் விதாரத்தை ஒளியாமல் சொல்லி தன் பர்த்தாவினுடைய பாதத்திற்கு நமஸ்கரித்தாள். அவள் வசனங்களைக்கேட்ட ரிஷியானவர் கடுஞ்சினமடைந்து தன்னுடைய மூத்த பிள்ளைகள் மூவரையு மழைத்து நடந்த வரலாற்றைக் கூறி, உங்கள் தாயாராகிய ரேணுகையை ஸம்ஹரித்து வாருங்களென்று ஆக்யாபித்தார். அம்மூவரும் ரிஷி சொன்ன வசனங்களைக் கேட்டு நாங்கள் எங்களன்னையை அப்படி செய்யமாட்டோம், என்று மறுதளித்துச் சொன்னார்கள். அப்படி மறுத்துச் சொன்ன தன் புதல்வர் மூவரையும் நோக்கி பிள்ளைகளே, தந்தைசொல்மிக்க மந்திரமில்லை யென்கிற வேத வசனங்களையும் மறந்து என் உத்திரவைத் தடுத்தமையால் சண்டாளராகப் போகக் கடவீர்களென்று சாபங்கொடுத்தார். அங்கணமே அம்மூவரும் சண்டாள திரேகத்தை யடைந்தார்கள்,

ரு உ-வது அத்தியாயம் முற்றிற்று.

கந-வது அத்தியாயம்.

பின்பு, நான்காவது குமாரனாகிய பரசுராமனை வரவழைத்து நடந்த விருத்தாந்தங்களனைத்தும் ஸாங்கோ பாங்கமாய்ச் சொல்லி, ஓ! பரசுராமா! நீ உன் மாதாவாகிய ரேணுகையை அழைத்துக்கொண்டு போய்ச் சங்கரித்து வாவென்று ஆக்யாபித்தார். அவ்வாக்ஞையை பரசுராமன் தான் சிரமேற் கொண்டு தந்தை சொல்லே முச்யமென் றுணர்ந்து கையில் கட்கத்தைப் பூண்டு தன் தாயையு மழைத்துக்கொண்டு வனத்திற்கேகி, ஆங்கோரிடத்தில் நிறுத்தித் தன் தாயின் சிரத்தைத் துணிக்க வெத்தனித்தான் அத்தருணத்தில், ஓர் சண்டாள ஸ்திரீயானவள் அவ்வனத்தி லோரிடத்திலிருந்து விறகு

கட்டைத் தன் தலையில் சுமந்துகொண்டு வருகிற சமயத்தில் இவர்களிருவரை யுங் கண்டு மனதிற் திகிலடைந்து இதென்ன, ஆச்சரியம், ஏதோ விபரீதம் தெரியவில்லை. இவர்களோபிராஹ்மணோத்தமராயிருக்கிறார்கள் இவர்களுக்கிப் படி வரக்காரணந் தெரியவில்லை.இதைப்பார்த்து சும்மாபோகக் கூடாது என் றெண்ணி இவர்களிடம் வந்து, ஓ. ஸ்வாமி நீஙகளார். உங்களைப்பார்த்தால் பிராம்மஹணோத்மர்களாய்க் காணப்படுகின்றதே நீங்கள் செய்யப்போகிற காரியம் உங்களுக்குரியதல்ல. ஸ்திரீஹத்ய தோஷத்திற்க்களாக வேண்ட மெ ன்று அவருக்கு நமஸ்கரித்து பிரார்த்தித்தாள். இந்த சண்டாள ஸ்திரீயிளு டைய வார்த்தைகளைக் கேட்ட பரசுராமர் அதிககோபங் கொண்டவராய் எனக்கு பிதாவாக்கியமே பெரிது, சீ, துஷ்டே, போவென்று அவளை திக்கா ரம் பண்ணிக் கொண்டு தன் தாய்கழுத்துக்குச் சரியாய்க் கத்தியை வீசினான் அதைக் கண்ட சண்டாள ஸ்திரீயானவள் இதென்ன பாபம், பார்த்த தோஷ மானது நம்மையும் வந்துசூழ்ந்து கொள்ளுகிறது. இதைவிட நாமும் பிரா ணன் விடுகிறது விசேஷ மென்றெண்ணி குறுக்கில் வந்து ரேணுகையின் கழுத்துக்குச் சரியாய் வரும் கத்தியைத் தடுத்தாள். பரசுராமனால் வீசப்பட்ட கத்தியானது இரண்டு சிரங்களையும் கண்டித்து விட்டது. அந்த இருவரு டைய சிரங்கள் வேராகவும் உடல்கள் வேராகவும் விழுந்ததைக் கண்ட பரசு ராமன் தன்பிதாவாகிய ஜமதக்னி ரிஷிக்கு அறிக்கைவிட்டான் அதைக்கேட் டவரும் ஆனந்தசாகரத்திலாழ்ந்து ஓ! பரசுராமா! பிதுர் வாக்கிய பரிபாலனத் தில் உனக்குச் சமானமானவன் ஈரேழுலகத்திலும் கிடையாது. நான்மிகவும் உன் விஷயத்தில் சந்தோஷ மடைந்தேன். உனக்கு வேண்டிய வரத்தை இக் கணமே கேட்டுக்கொள் தருகிறே னென்றார். அதற்கு அவன், ஓ! பிதாவே எனக்கு வேண்டிய வரம் யாதென்றால் நான் கொன்ற என்தாயாரை உஜ்ஜீவி க்கும் படிக்கும் என்தமையன்மார் மூவருடைய சண்டாளத்வம் நிவர்த்தியா கும் படிக்கும் அன்னையைக் கொன்ற பாபம் என்னை யணுகாமலிருக்கும் படி யாகி இம்மூன்று வாரங்களையும் தந்தருள வேண்டும் மென்று வணங்கி கேட் டுத் தன் மைந்தனுக்கு ஸந்தோஷித்தவராய் உன்னிஷ்டப்படி தந்தேன்தந் தேன் இதோ இந்த கமண்டலத்து ஜலத்தை எடுத்துக் கொண்டு போய் உன் தாயினுடைய சிரஸையும் உடலையும் ஒன்றாகச் சேர்த்து இந்த தீர்ததத்தை அவள் மேல் ப்ரோக்ஷித்து எழுப்பினாலெழுந்து விடுவாளென்றும் உன்தமை யன் மார்களும் சாபம் நீங்கி சுகமாக வாழ்வார்களென்றும் உன் தாயைக் கொ ன்ற தோஷம் உன்னைப் பற்றாதென்றும் சொல்லி அனுக்கிர ஹித்தனுப்பினார் இம்மூன்று வாரங்களையும் பெற்ற பரசுராமன் கமண்டல ஜலத்தை எடுத்துக் கொண்டு தன் தாய் கிடக்குமிடஞ் சென்று அவள் சிரசை கையிலெடுத்துக் கொண்டு தேகபேதந் தெரியாமல் சண்டாள ஸ்திரீ உடலுடன் சேர்த்து தீர் த்தத்தைத் தெளித் தெழுப்பினான். ரேணுகாதேவி எழுந்திருந்து தன்தேகம் மாறியிருப்பதாய்க் குமாரனுக்குச் சொன்னாள் அதைக் கேட்ட பரசுராமன்

தன் தாயை யழைத்துக் கொண்டு பிதாவினிடம் வந்து நமஸ்கரித்து நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லுகின்றான்.

கரு-வது அத்தியாயம் முற்றிற்று.

கசு - வது அத்தியாயம்.

ஜமதக்னி ரிஷியானவர் தெரிந்து கொண்டு ஓ! பரசுராமா பூர்வவிதிபயலைத் தடுக்கவல்லவர்யார். அனுபவிக்க வேண்டியது தவிர வேறொன்றில்லை, நீ மறுபடியும் அந்த தீர்த்தத்தை எடுத்து கொண்டு போய் அந்த சண்டாள ஸ்திரீயினுடைய சிரசையும் உன் தாயின் தேகத்தையும் ஒன்று சேர்த்து தீர்த்தத்தைப் பரோக்ஷித்து எழுப்பி யழைத்துவா வென்று சொல்லியனுப்ப அவன் அப்படியே சென்றுப் பரோக்ஷித் தெழுப்பி யழைத்து வந்தான் ரிஷியானவர் கடாக்ஷவீக்ஷண்யராய் அவ்விரண்டு ஸ்திரீகளையும் தன்னிடஞ் சேர்த்துக் கொண்டார் உடனே பரசுராமன், தவஞ் செய்ய வெண்ணிக் கொண்டவனாய் பிதாவினிடத்தி லனுக்ஞை பெற்றுக் கொண்டு வனத்திற் கேகி தவஞ் செய்து கொண்டிருந்தான் இப்படியிருக்க குண்டலீநகரத்திற்கு அரசனாகிய மருத்வன் என்கிற அரசன் சத்ருக்களால் அபஜயமடைந்து குண்டலீ நகரத்தை விட்டு தன்னுடைய பூர்வ தேசமாகிய விதர்ப்ப தேசம் போயச் சேர்ந்தான் அரசனில்லாத அந்தகுண்டலீ நகரமானது பாழடைந்து போய்விட்டது. ஜமதக்னி ரிஷியாச்ரமத்திலிருந்த இதர ரிஷிகளனைவரும் வேறு வனஞ்சென்று விட்டார்கள் இவ்விதமாக யிருக்கிற காலத்தில் மாஹிஷ்மதி புறத் துஅரசனாகிய ஹேஹய ராஜாவின் குமாரனான கார்த்த வீர்யார்ச்சுன னென்பவன் தன து ஸைனியங்களோடு கூடினவனாய் வேட்டை யாடிக் கொண்டே ஜமதக்னி ஆச்ரமத்திற்கு வந்து சேர்ந்தான். அவனுடைய பராக்ரமம் எப்படிப்பட்ட தென்றால் திரிமூர்த்திகளம்சமாகிய தத்தாத்ரேயரைக் குறித்து தவஞ்செய்து ஸஹஸ்ர புஜங்களையும் அணிமாதி அஷ்டசித்திகளையும் அநேக அஸ்தர சஸ்திரங்களையும் பெற்றுக் கொண்டு அதிக பராக்ரம சாலியாய் ஸகல லோகங்களையுஞ் ஜெயித்து ஏகசத்ராதிபத்தையடைந்து பிரகாசித்துக்கொண்டு இருக்கிற கார்த்தவீர்யார்ச்சுனன் ஜமதக்னி ரிஷிக்கு நமஸ்கரித்தான். ரிஷி சிரேஷ்டர் அவனுக்காசிர்வதித்து காமதேனுவை வரவழைத்து அந்தராஜனுக்கும் அவன் சேனைகளுக்கும் அவர்களிஷ்டப்பிரகாரம் திருப்தி செய்வித்தார் அவ்வரசன் மிகுந்த ஸந்தோஷமடைந்து, ஓ! ரிஷி சிரேஷ்டரே, இந்தகாமதேனுவைக் கொடுங்கள் தங்களுக்கு என்னிடமிருக்கிற பசுக்களில் ஆயிரம் பசுக்களைத் தருகிறே னென்றான். அவ்வசனங்களைக்கேட்ட ரிஷியானவர், ஓ! அரசனே! உன்னுடைய பசுக்களும்

வேண்டாம். இந்தகாமதேனுவை நானுங்கொடேனென்றார். உடனே, அரசன் கடுஞ்சினங்கொண்டு தன் சேனைகளை வரவழைத்து அந்தகாமதேனுவைப் பிடித்துவரும்படிசெய்து அதோடு தன் சைனியத்தைக்கூட்டி தன்னிருப்பிடமனுப்பிவிட்டு இந்த ஆச்ரமத்திலிருந்த ரிஷிகளையும் அவர்கள் சிஷயர்களையும் ஹிம்ஸித்து வனங்களையழித்துவிட்டு தன்னுடையதேசத்திற்குப்போகையில் மார்க்கத்தில் தன் பிதாவைப்பார்க்கவரும் பரசுராமனைச்சந்திக்க பரசுராமர் ஓ, அரசனே! யாரோ ஒருவன் என் பிதாவின் ஆசரமம் சென்று காமதேனுவினாலுபசரிக்கப்பட்டு உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைப்பதுபோல் அந்தகாமதேனுவைப்பிடித்துக்கொண்டு ஆச்ரமத்தையும் அழித்து, ரிஷிகளையும் ஹிம்ஸித்துப்போனவன், யாரோ தெரியவில்லை. அவன் என்னை பரசுராமனென்றறியாப்போலும் இதோ பார். என் பராக்ரமத்தைத் தெரிவிக்கிறேன், என்றார். இவ்வசனங்களைக்கேட்ட கார்த்த, வீர்யார்ச்சுனன், யாதொன்றும் பேசாமல் தன்னிருப்பிடம் போய்ச்சேர்ந்தான்.

கசு-வது அத்தியாயம் முற்றிற்று.

கரு - வது அத்தியாயம்.

பரசுராமர், பிதாவிடம் வந்து நமஸ்கரித்து கார்த்திவீயார்ச்சுனனால் நடந்த கொடுமைகளைத்தெரிந்துகொண்டுப்ரளயகாலருத்திரனைப்போல் ஈரேழுலோகங்களும் நடுநடுங்க கர்ஜித்துக்கொண்டு கோதண்டத்தைக்கையிலெடுத்து வளைத்து நாணேற்றி பரசாயுத்தத்தையும் தரித்துக்கொண்டு மாஹீஷ்மதீபுரஞ்சென்று அவ்வரசனுடைய எதிரில் நின்று கண்களில் நெருப்புப் பொறிகள் வீச மீசை படபடவென்றுதுடிக்க, பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டு, எதிரில் நின்றபரசுராமனைப்பார்த்து கார்த்திவீயார்ச்சுனன் சொல்லுகிறான். ஓ. ராமரே! நீர் பாலராயும் பிராம்ஹணராயும் இருக்கிறீர். உமக்கென்ன பயித்தியம் பிடித்திருக்கிறதா? உமக்கும் யுத்தத்திற்கும் எவ்வளவோ தூரம் நீர் யுத்தம்செய்யத்தகாது. சுகமாய் உம்மிடத்திற்கு செல்லுமென்று சொன்ன அரசனுடைய வசனங்களைக்கேட்டு ராமரானவர், மிகவுங்கோபங்கொண்டவராய் கெர்ஜித்து, திக்காரஞ்செய்து, ஓய், துஷ்டகிருத்யனே! வீணனவார்த்தைகளைப் பிதற்றவேண்டாம். யுத்தத்திற்கெழுந்திரு. உன்னை ஹதஞ்செய்துவிடுகிறேன் பார் என்று சொன்னதைக்கேட்ட அரசனானவன் மூர்க்கங்கொண்டு சேனாதிபதிகளைவரவழைத்து, ஓ, வீரர்களே. இந்த பிராஹ்மணன் தன் தர்மத்தைவிட்டு க்ஷத்திரிய தர்மமாகிய யுத்தத்திற்கு தனுர்பாணங்களுடன்வந்ததினால் நமக்கு பிரம்மஹத்திதோஷமில்லை. இப்பொழுதேப் போதே யுத்தசன்னத்தராய்ப் புறப்பட்டு இந்த பர்சுராமனை ஸம்ஹரித்து

வாருங்களென்று பதினேழு அக்ரோணி ஸைனியங்களைக்கூட்டியனுப்பி அநேகவிதமான அஸ்திரசஸ்திரங்களுடன் போகும்படி ஸேனாதிபதிகளுக்கு விடைகொடுத்தான். உடனே ஸேனாதிபதிகள் ஸைனியங்களோடு புரப்பட்டு பரசுராமன் மீது வருகிறதைக் கண்டராமர் தன்கண்களினாலே அந்தஸைன்யத்தை உருட்டிப்பார்த்து தன்னுடைய பரசாயுதத்தால் அந்தஸைன்யத்திலுள்ள ஒவ்வொருவனையும் மரங்களைவெட்டிக்கழிப்பதுபோல கைவேறு, தலைவேறு, உடல்வேறு, கால்வேறாகவெட்டி எறிந்து யானைகள் குதிரைகள், ரதங்கள், முதலானதுகளைஹதஞ்செய்து கார்த்தவீரயார்ச்சுனனெதிரில் நின்று கொண்டு உன்னையும் ஹதஞ்செய்து விடுகிறேன். வாவென்றழைக்க, அவ்வரசன் கடுஞ்சினமடைந்து அடே, ராமா, உன்னை என்னுடைய ஆயிரங்கரங்களினால் பிடித்து நசுக்கிவிடுகிறேனென்று சொல்லிக்கொண்டே கிட்டவருகையில் ராமர் தன்னுடைய பரசாயுத்தால் ஒரு விருக்ஷத்தின் கிளைகளைகழிக்கிறதுபோல ஒருபாய்ச்சல் பாய்ந்து அவன் தோளில் ஏறிக்கொண்டு அவனுடைய கரங்களனைத்தையும் அருத்துவிட்டு சிரஸையுங்கண்டித்து தலைவேறு, உடல்வேறாக்கினார். கார்த்தவீரியார்ச்சுனன் இறந்துவிட்டதைக் கண்ட அவன்பிள்ளைகளனைவரும்பயப்பட்டு ஓடோடியும் போய்மறைந்துவிட்டார்கள். இம்மாதிரியாக கார்த்திவீர்யார்ச்சுனனை ஸம்ஹரித்துவிட்டு காமதேனுவையழைத்துக்கொண்டு பிதாவாகிய ஜமதக்னி ரிஷியினிடம் வந்து சேர்ந்தார்.

கரு-வது அத்தியாயம் முற்றிற்று.

கசு - வது அத்தியாயம்.

பரசுராமர் கார்த்த வீரியார்ச்சுனனை சங்கரித்துவிட்டு காமதேனுவை மீட்டிக்கொண்டு தந்தையிடமிருந்து தான் போய்வந்த விர்த்தாந்தங்களனைத்தையும் சாங்கோபாங்கமாய் பிதாவினிடம்சொல்ல ரிஷிசிரேஷ்டர்கேட்டு ஓ! பரசுராமா! நீ என்ன காரியம் செய்தாய் யுத்தம் செய்வது பிராஹமணர்களுக்கு தர்ம்ம மல்ல அப்படிக் கிருக்க அவ்வரசனை ஏன் சம்ஹரித்தாய் ஒரு சக்கரவர்த்தியை சங்கரிக்கிர தோஷமானது ப்ரம்மஹத்தி தோஷத்தைப் பார்க்கிலும் அதிக மானதால். இக்கணம் போய் கெங்காஸ்தானம் செய்து விட்டுவாவென்று. சொல்ல அக்கணமே புரப்பட்டு கெங்காநதிக்கு ஸ்நானமாடச்சென்றார். மற்ற மூன்று குமாரர் தவம் செய்யப் போனார்கள். இப்படியிருக்க கார்த்திவீர்யன் குமாரர்கள், பிதா போனதைக்கருதி ஒன்று கூடி தங்கள் பிதாவைக் கொன்ற ராமன் பேரில் கடுஞ்சினங் கொண்டு அவனைத் தேடிக்கொண்டே ஜெமதக்னி மஹா ரிஷியின் ஆச்ரமம் வந்து

அவருடைய வனங்களை யழித்து ரிஷி சிஷ்யர்களையும் ஹிம்சித்து ரிஷி யின் ஓமமண்டபத்திற் கருகில் வந்து நாலு பக்கமும் சுத்திப்பார்த்து பரசுரா மனைக் காணக் கிடைக்காமல் அசைவற்ற யோகத்தில் உட்கார்ந்து கொண்டி ருக்கிற தவவிசேஷ்டரும் புண்ணிய புருஷருமாகிய ஜெமதக்னி ரிஷியின் சிரஸைக் கண்டித்து விட்டு ஓடிப்போனார்கள். அச்சமயத்தில் அதைக்கண்ட ரேணுகையானவள் மஹா துக்கத்தையடைந்து தனக்குதவியாரையும் காணா மல் அக்னி வளர்த்தி அதில் பர்த்தாவை படுக்கவைத்து அக்னி கலந்தெரியும் போது அந்த அக்னியில் தானும் பர்த்தாவோடு சயனித்துக் கொண்டாள். அந்த அக்னியில் இரண்டு புண்யத்தேகங்களும் எரிகிற சமயத்தை யறி ந்த இந்திரன் அந்த ரேணுகாதேவி மகிமை தங்கிய தேவாம்சத்தை அடையப் போகிறவர்களென்று ஏர்கனவே தெரிந்துகொண்டிருப் போனதலால் தாமச மின்றி வருணனை யேவி அவ்வக்னியைத் தணித்துவிடச் செய்தான். ரேணு கையினுடைய தேகத்தில் தரித்துகொண்டிருந்த வஸ்த்ரமானது எரிந்து போய் அவளங்கை முழுதும் ரணமாய்விட்டது அப்புண்ணால் அவஸ்தைப் பட்டுக்கொண்டு அக்னி அணைந்து விடவே எழுந்திருந்து தனக்கு வஸ்திர மில்லாததாலும் சரீரமுழுதும் எரிந்த ரணபாதையாலும் சகிக்கமுடியாத துய ரங்கொண்டு அவ்வனத்திலிருந்த வேப்பந்தழைகளை வஸ்த்ரமாக தரித்துகொ ண்டு ஒன்றுந் தோன்றாமல் வனமுழுதுந் திரிந்து ஆகாரமில்லாமையால் க்ஷுத்பாதையால் வருந்தி ஆ! ஆவென்று கதறிக்கொண்டு அருகிலிருந்த ஒரு சண்டாள வீதியில் நுழைந்து அங்கிருந்த கன்னிகாஸ்திரீகளைப்பார்த்து என க்கதிக பசியாயிருக்கிறது. ஏதாவ தாகாரம் கொடுங்களென்று கேட்டாள். அதைக்கேட்ட வந்தக்கன்னிகைகள் இஃதென்ன வாச்சரியம். இந்தம்மாளைப் பார்த்தால் ஏதோ ஒரு பிராம்மண ஸ்திரீயைப்போலத் தோன்றுகிறது. நாம் அன்னமளிப்பது பாபத்துக்கேது, என்றெண்ணி பச்சரிசி மா, வெல்லம், இள நீர், முதலானவைகளைக் கொடுத்தார்கள். அதைச் சாப்பிட்டுக்கொண்டு அங்கு மூன்று நாள்த்தங்கி நாலாநாள் அவ்விடம் விட்டு வண்ணார் வீதி வந்து வண்ணார் கொடுத்த பழைய வஸ்த்திரங்களைத் தரித்துக்கொண்டு, அவ்விடத் திலும் நான்கு தினம் தங்கி அதையும் விட்டு புறப்பட்டு தன் பர்த்தாவாகிய ஜமதக்னி ரிஷி மடிந்து கிடக்கிற விடம் வந்து தன் குமாரர்கள், ஒருவரை யும் அங்கு காணாமல் துயரமடைந்து ஓ "குமாரர்களே" சீக்கிரம் வாருங்கள் வாருங்கள் என்று கதறியழுதுக் கொண்டிருக்கையில் தன் மூத்த குமாரர்களா கிய மூவரும் வந்து பிதா மடிந்து கிடப்பதைப் பார்த்து வருத்தமுற்று தந்தை யைக் கட்டிக்கொண்டழுதார்கள். இவர்களிப்படி புலம்பிக்கொண்டிருக்கும் சமயத்தில் பரசுராமர் பிதாவின் உத்திரவுபடி தீர்த்தயாத்திரை செய்துக்கொ ண்டு பிதாவை தரிசிக்க வந்தவனை அவன் அன்னையாகிய ரேணுகாதேவி புத் திரனைப் பார்த்து புலம்பிக்கொண்டே ஓ பரசுராமா நீ இல்லாத சமயத் தில் அந்த கார்த "வீரியார்ஜுனன் குமாரர்க ளனைவரும் வந்து உன்

பிதாவைக் கொன்று விட்டார்க ளென்றுசொல்லி ஓலமிட்டுக் கூறியழுதுக்கொண்டே தன் கரங்களால் இருபத்தேழுதரம் தம்மார்பில் பளா பளாவென்று மோதி யடித்துக்கொண்டு அதனல் மூர்ச்சையாகி ரிஷியின் மீது வெட்டி சாய்க்கும் மரம் போல் விழுந்துவிட்டாள். இக்கோலத்தைக்கண்ட பரசுராமர் கடுஞ்சினமடைந்து தன் பரசாயுதத்தை கரத்திலெடுத்துக்கொண்டு ஓமாதாவே'' நீ யொன்றுக்கும் பயப்படவேண்டாம். நானிப்போதே புரப்பட்டுப்போய் இந்த ஆயுதத்தால் இவ்வுலகத்திலுள்ள க்ஷத்திரிய வம்சங்களை நிர்மூலப்படுத்தி, அதனலுண்டாகும் உதிரப் பிரவாகத்தால் என் பிதாவுக்கு தர்ப்பணம் முதலான கர்மங்களைச் செய்து முடிப்பேன், அன்றியும் மழைபெய்யச்செய்கின்ற இந்திரன் முதலான தேவர்களையும் ஹதம்செய்துவருவேன். யாதொன்றுக்கும்மஞ்சவேண்டாம் அன்னையேயென்றுசொல்லி நமஸ்க்கரித்து ஆயுதத்தை கையிலெடுத்துக்கொண்டு காலனைப்போல கர்ஜித்துநின்றான்.

கசு-வது அத்தியாயம் முற்றிற்று.

கஎ-வது அத்தியாயம்.

இவ்விபரீதங்களையறிந்த இந்திராதிதேவர்களும் த்ரிமூர்த்திகளும் புரப்பட்டு இவர்களிருக்கிற குண்டலீநகரத்திற்கு வந்து ஜமதக்னி ஆச்ரமத்திலிருக்கிற பரசுராமனையும் ரேணுகாதேவியையும், மரணமடைந்திருக்கிற ரிஷியையும்பார்த்தார்கள். அப்போது பார்வதிபதியாகிய பரமசிவன் பரசுராமனைநோக்கிசில வசனம் சொல்லத்தொடங்கினர், அதிவீரசூரபலபராக்ரமசாலியான ஓ! பரசுராமா! உன் தாய்தந்தைகளைக்குறித்து துக்கப்படாதே. அவர்களுடையபூர்வவிதிப்படிநடந்துவிட்டது. நீதெரிந்துக்கொள்ளவேண்டுமானல் அவர்களுடைய ஸ்வபாவத்தைச்சொல்லுகிறேன் கவனமாய் கேளப்பா. உன்தாயார் பராசக்தி அம்சமானபடியால் மழையினல் தணிக்கப்பட்டாள். இப்போது இரண்டு ரூபமாகப்போகிறுள். அதிலொன்று உன் தந்தையோடு தெய்வலோகத்திலும் மற்றொன்று மாயாரூபமாயிருந்து கொண்டு சகல ஜீவராசிகளுமுஜ்ஜீவிக்கும் பொருட்டு இப்பூவுலகில் பிரகாசிக்கப்போகிறது. உன்தாயினுடைய திரேகத்திலுள்ள இரணங்களெல்லாம், உலகத்திலிருக்கும் ஜீவராசிகளுக்கு முத்துமுத்தாகத்ரேகத்திலேற்படும், அவளப்போது முத்துமாரியென்றும் எல்லமாரியென்றும்பெயர்கொண்டுவழங்கப்படுவாள். அதினலுண்டாகும் அவஸ்தைகளுக்கு, அவள் தரித்த ஆடையாகிய வேப்பிலையே அதற்குரிய ஔஷதம், அவ்வேப்பிலையே புஷ்பம். அவள் புசித்தமா, வெல்லம், இளநீரே அவளுக்குரிய நைவேதனம், எண்சாணுடம்பிற்கு சிரசே பிரதானமான

தால், பிரதி கிராமங்களிலும் பட்டணங்களிலும் உள்ள ஜனங்கள் அவள் சிரஸை ஸ்தாபித்து கோயில் கட்டிதரிசிக்கப்போகிறார்கள், சுட்டும் சுடாமலிருக்கிற அந்த அக்னிஜ்வலிதத்தை சிதாபஸ்மமென்று அதிக சிலாக்கியமாய் தரித்துக்கொள்ளப்போகிறார்கள். உன் பிதா ஜமதக்னிரிஷிதேவர்களோடு தன் பத்னியுடன் ஸப்தரிஷிகளில் ஒருவராக பிரகாசிக்கப்போகிறார். பரசுராமா. நானுரைத்தவனைத்தும் நிச்சயம். நிச்சயம். என்று சொல்லி பரமசிவன் தன்கடைக்கண்ணால் ஜமதக்னி ரிஷியையும் அவர்பத்னியையும் பார்த்தருளினார். அக்கணமே ரேணுகை அங்கிருந்ததேவர்கள் முன்னிலையிலேயே பரமசிவத்தின் கடாக்ஷவீக்ஷண்யத்தால் பராசக்தி அம்சமாகிய திவ்யரூபத்தை யடைந்து நவரத்னகசிதமான ஆடையாபரணங்களுடன் நான்கு கரங்களிலாயுதங்களும் ஸர்ப்பகங்கணங்களும் தரித்து ஸிம்ஹவாகனத்தில் ஆரோகணித்துக்கொண்டு மாயசக்தியாகிய மகம்மாரியென்று நாமம்வகித்து இந்திராதிதேவர்களைப்பார்த்து சில வசனஞ்சொல்லத்தொடங்கினாள்.

கஎ-வது அத்தியாயம் முற்றிற்று.

கஅ-வது அத்தியாயம்.

பூதபவிஷ்ய வர்த்தமான மென்கிற த்ரிகாலங்களையுமறியும் தேவர்களே கேளுங்கள். நான் ஸமஸ்த ஜீவராசிகளையும் எனக்குள்ளடக்கிக்கொண்டு பரிபாலனஞ்செய்வேன். என்னை யார் தியானிக்கிறார்களோ அவர்களுடைய பாவங்களை ஹரித்து காமியார்த்தங்களைக் கொடுத்து இரக்ஷிப்பேன். பரமசிவத்தின் கடாக்ஷவீக்ஷண்யத்தால நுக்கிரஹித்த வண்ணம் நடத்துவேன். என்னை நினைத்து கமண்டலநதியில் ஸ்நானம் செய்தவர்களுடைய விபத்தைப் போக்குவேன் இது நிச்சயம், நிச்சயமென்று சொல்லிப் பின்னும் சொல்லுகிறாள் ஓ தேவர்களே ! என்னருகில் நிற்கிற சண்டாள ரூபத்தையும் என்னுள் ஆக்ரஹித்துக்கொண்டு வேத மோதாமலும் அக்ரமங்கள நிகழ்வியும், கர்மானுஷ்டானங்கள் தவறியும் நீசத்வமுள்ள விடங்கள் தோறும் கொள்ளை நோயால் பீடிப்பேன் அத்தருணத்திலேயும் என்னை நினைந்து பசரித்தால், அதையும் நீக்கி இரக்ஷிப்பேனென்று தேவர்களுக்குச் சொல்லிய பின் தன் குமாரனைப் பார்த்து என தன்பிற்குகந்த பரசுராமா இன்று முதல் என்னை விட்டகலாமல் என்னிடத்திலேயே யிருக்கக்கடவாயென்ற னுக்ரஹித்து அந்தர்த்தியானமாய் விட்டாள். தாய் மறைந்ததைக் கண்டு தியங்கி நிற்கும் ராமனை தேவர்களா சீர்வதித்து நீ சிரஞ்சீவியா யிருக்கக் கடவா யென்றனுக்கிரஹித்து அந்தர்த்தியானமாய் அவரவர்களிடம் போய்ச் சேர்ந்தார்கள் அதுமுதல் அக்குண்டலீ நகர

ரத்தில் த்ரிமூர்த்திகளுடைய ஸ்தாபிதமும் ரேணுகாதேவி ஆலயமும் இருக்கி ன்றன. ஏகனுய்கன்ற பரசுராமன் தான் முன்சொல்லிக் கொண்ட சபதப்பிர காரம் கார்த்த வீரியன் குமாரர் முதலான அரசர்களைக் கொன்றுமுன் தன் தாய் இருபஃதோரு தரம்மார்பிலடித்துக் கொண்டு துக்கப்பட்டதை முன்னி ட்டு மூவேழிருபத்தேழுதலை முறைவரைக்கும் உலகத்தில் க்ஷத்ரியப் பூண் டேஇல்லாமல் வேர்களைந்துகொன்றுவிட்டு உலகமனைத்தையும்தன் வசமாக்கி கொண்டார் அதற்கு மேல் அரசர்களுடைய உதிர நதியில் பிதுர் தர்ப்பணம் செய்து அந்நதியை ஒன்பது தடாகங்களா நிறுத்தி அவ்வுதிர்த்தால் பிதாவின் சிரஸையும் உடலையும்சந்தித்து உட்காரவைத்து அவருக்கெதிரில் ஜெகபதியா கிய பரமசிவனை..ந்துயாகமொன்றுசெய்தார் அந்த சமயத்திலகாசிபர்முத லானரிஷிகளுக்கும்தபோ..னர்களுக்கும் பிராஹ்மணோத்தமர்களுக்கும் தான் ஜெயித்த சகலதேசங்களையு ம..கக்ஷிணையாக தானஞ்செய்துவிட்டு அவப்ருதஸ் னானஞ் செய்து ஸமஸ்தபாபங்களையும். நி..த்திசெய்துக்கொண்டுசூரியனைப் போல் பிரகாசித்தார். உலக மு..வதும்பரசுராமனால்தானம்வாங்கிக்கொண்ட காசிபர் முதலான ரிஷிகளும் எல்லாரும் ஒருங்கே சேர்ந்துதானஞ் செய் தவிடத்தில் நீ இருக்கத்தகாதென்று சொன்ன வார்த்தையைக் கேட்ட ராமர் கடுஞ்சின மடைந்து ஓ ரிஷிகளே! இது முதல் நன்றி மறந்த உங்களுக்கு அன் யோன்ய மில்லாமலிருக்கக்கடவ தென்று சபித்துவிட்டு அவ்விடம் கன்றும கெந்திர கிரியைச் சார்ந்து..முதர ராஜனைக்குறித்து தனக்குத் தவம்புறியகொ ஞ்சமிடந்தர வேண்டு மென்..றி தவஞ்செய்து கேட்க அவர்பிரசன்னமாய் ஓ ராமா உன்னுடைய பரசாயுதத்தை சமுத்திரத்தி லெறிந்தால் அது எவ்வளவு தூரம் செல்லுமோ அவ்வளவு இடம் தருகிறே னென்று திருவாய் மலர்ந்தரு ளக் கேட்டராமன் அவ்வாறே தன்னுயுதத்தை எறிந்தார். அந்த ஆயுதம் விழு ந்த மாத்திரத்தில் ஜல மொதுங்கி நிலந்தோன்றிற்று. அதுமுதல் அவ்விடத்தி ற்கு பரசுராம க்ஷேத்திர மென்று வழங்கிவருகிறது. கேட்டீரோ, விவஸ்வான் ராஜ..வே யென்று சொல்லி வசிஷ்டமுனிவர் பின்னும் சொல்லுகிறார்.

கச-வது அத்தியாயம் முற்றிற்று.

கரு-வது அத்தியாயம்.

ஆனபடியினாலே இப்பேர்ப்பட்ட மகிமையுள்ள அந்த குண்டலீநகரத்தி ற்குபோய் கமண்டலு நதியில் ஸ்நானம் செய்து அந்த ரேணுகாதேவியைத்யா னித்தமாத்திரத்தில் உன்னுடைய கஷ்டங்கள் நீங்கி விடுமென்றுசொன்ன வுடனே விவஸ்வான ராஜாவானவன் குண்டலீ நகரம்போய் சேர்ந்து ரேணு கையைக்குறித்து தவஞ்செய்தான் உடனே தேவியானவள் பிரத்யக்ஷமாகி

ஸிம்ஹவாஹனம் எரிக்கொண்டு அந்தராசனுடைய சத்ருக்களை ஹதம்செய்து முன்போலவே அயோத்யாபுரிக்கி அரசனுக்கி ரக்ஷித்தாள் சிலகாலம். கழித்த பின் விவஸ்வான் ராஜாவானவன் தன்புத்திரனாகிய ஹரிஹரபுத்திரனுக்கு ராஜயத்தை ஒப்புக்கொடுத்து தான் குண்டலீநகரம் வந்து ரேணுகாதேவிக்கு ஆலயம் கட்டிவைத்து தான் அந்த குண்டலீநகரத்தை ஆண்டுகொண்டு வந்தான். சிலகாலம் கழித்தபிறகு ஹரிஹரபுத்ரனுக்கு இந்த குண்டலீநகரத்திற்கு பட்டாபிஷேகஞ் செய்வித்து தான் தவத்திற்குச்சென்றான். ஹரிஹரபுத்திரனானவன் அரசாண்டுக்கொண்டு வந்து ஹிரண்யவர்ணன் யென்கிற குமாரனைப்பெற்று அவனுக்கு ராஜயத்தை ஒப்புவித்து தவத்திற்குச் சென்றான் ஹிரண்யவர்ணனென்கிறவன் அந்தகுண்டலீநகரத்தையும் அயோத்யாபுரியையும் ஆண்டுகொண்டுவந்து அவன் குமாரனாகிய ஹேமமாலியென்கிறவனுக்கு ராச்சியத்தை பட்டாபிஷேகஞ்செய்வித்து தானும்தவத்திற்குச்சென்றான் இந்தமாதிரியாக கிருதயுகமுழுவதும் சென்றதென்று சூதமுனிவர் சௌனகாதிகளுக்குசொன்னார் இவ்விதமாகசொல்லிக்கொண்டு வந்த சூதமுனிவரைப்பார்த்து சௌனகாதிகள் கேழ்க்க ஆரம்பித்தார்கள் ஓ முனிசிரேஷ்டரே தங்களால்அந்த குண்டலீநகரத்தில் ப்ரகாசிக்கும் ரேணுகாதேவி ப்ரபாவத்தைக் கேட்டு எங்கள் மனமானது அதிக சந்தோஷமடைந்தும் இன்னமும் அந்த தேவியின் பெருமையை கேழ்க்க விரும்புகிறோம். யென்று சொன்ன உடனே சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார். கேளுங்கள் ரிஷிகளே கிருதயுகம் நடந்த பிறகு திரேதாயுகத்தில் அயோத்தியாபுரியையாளப்பட்ட தசரதசக்ரவர்த்தி திருமகனாகிய ஸ்ரீராமபிரான் ராவணஸம்ஹாரம் செய்து அயோத்யாபுரிக்கு வந்து பட்டாபிஷேகம் செய்துக்கொண்டு அரசாண்டுக்கொண்டு வருகிற காலத்தில் ஒருநாள் ரிஷி சிரேஷ்டர்களுடன் ஸிம்ஹாஸனத்தில் உட்கார்ந்துகொண்டு இருக்கிறகாலத்தில் ஆகாயத்தில் ஒரு சப்தம் உண்டாயிற்று அதென்னவென்றால் ஓ ஸ்ரீராமா? நீதசகண்டராவணனைக்கொன்றது பெரிதல்ல இப்போது காஸ்யபரிஷியின் குமாரனாகிய சதகண்டராவணன் யென்கிற ஒரு அசுரன் இருக்கிறான் அவன் க்ஷீரஸமுத்ரத்திற்கு சமீபத்தில் மாயாபுரியில் வஸித்துக்கொண்டு தேவர்களை ரிஷிகளையும் இம்ஸித்துக்கொண்டு வருகிறான் அப்பேர்ப்பட்ட அசுரனைக்கொன்றால்தான் உனக்கு புண்ணியபதவியும் கீர்த்தியும் கிடைக்குமென்று சொல்லிய ஆகயாவாணியின் வார்த்தையைக்கேட்ட ஸ்ரீராமசந்திரன் மனதில்ஒன்றும் தோன்றாதவராய் அங்கிருக்கிற ரிஷிகளுக்குள் சிரேஷ்டராகிய அகஸ்தியமுனிவரைப் பார்த்து. முனிசிரேஷ்டரே அசரீரிவார்த்தைக்கேட்டபின்யெனக்கு ஒன்றும் தோணவில்லை தசகண்டராவணனை ஸம்ஹரித்துவந்த கஷ்டமானது இன்னமும் தீரவில்லை. இந்த அசுரனோ சாகத்வீபத்தில் இருக்கிறான். நடுவில் ஐந்து ஸமுத்திரங்கள் இருக்கிறது அதைத்தாண்டுவதற்கு மார்க்கம் தெரியவில்லை இத்தனையெல்லாம் யோசித்து தாங்கள் அவனை ஸம்ஹாரம் செய்வதற்கு

யென்ன உபாயமோ அதையெனக்குத்தெரியப்படுத்தவேண்டுமென்று பிரார்த்திக்க அகஸ்திய ரிஷியானவர் சொல்லுகிறார்.

க௯-வது அத்தியாயம் முற்றிற்று.

௨௰-வது அத்தியாயம்.

ஓ! ராமசந்திரனே! ஆயாசப்படவேண்டாம் அந்தக் கொடியதுஷ்டனை இப்போதே புறப்பட்டுப்போய் சம்ஹரித்துவிடு, உனக்கு சஹாயமாய் ஹநுமாரை அழைத்துக்கொண்டுபோகவேண்டும், இந்த ஸாகரங்கள் தாண்டுவதற்கு அவரொருவருக்குத்தான் சக்திபுண்டு, இவரால் அந்த இடத்திற்குப்போய் அவனை ஜயிக்கலாம் யோசிக்க வேண்டுவதில்லை. ஹநுமாரை வரவழியென்று உத்தரவு கொடுத்த ரிஷியின் வார்த்தையைக் கேட்ட ஸ்ரீராமபிரான் ஆஞ்ஜநேயரை அழைப்பித்துச்சொல்லுகிறார். ஓ'ஹநுமானே! க்ஷீராப்திக்கடுத்த சாகத்வீபத்தில் மாயாபுர மென்கிற லங்கையில் சதகண்டனென்கிற அசுரன் இருக்கிறான்; அவனை நாம் போய் சம்ஹரித்து வரவேண்டும், சீக்கிரத்தில் வானரஸேனைகளை அழைத்துக்கொண்டு புறப்படவென்று உத்தரவு கொடுத்தார். உடனே ஹநுமான் தன்ஸேனைகளைக் கூட்டிக் கொண்டு தான் விஸ்வரூபத்தை யெடுத்து ஸ்ரீராம லக்ஷ்மண பரத சத்ருக்னனென்கிற நால்வரையும் தோளின்மேலும் மற்ற ஸேனைகளை முதுகின்மேலும் ஏற்றிக்கொண்டு புறப்படுகிற சமயத்தில் ஸீதாதேவியானவள் நானும்வேடிக்கைப்பார்க்கத் தேவருடன் வருகிறேன் என்ற வார்த்தையைக்கேட்டுஸ்ரீராமர் ஓ!ஜானகி:நீபெண்பாலா இருப்பதால் வரவேண்டாம் என்று சொல்லியும் கேளாமல் நீங்கள் இருக்கிறபோது எனக்கென்னபயம் என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டு வருகிற ஸீதாதேவியை ஸ்ரீராமர் தனது மடியில் உட்காரவைத்துக்கொண்டார். ஹநுமார் இவ்வளவு ஸைந்யங்களுடன் ஒரு தரம் ஹூங்காரம் செய்து புறப்பட்டு நிமிஷமாத்திரத்தில் அந்த சாகத்வீபத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். ஸ்ரீராமர் யெல்லா ஸைந்யங்களையும் ஒரு இடத்தில் நிறுத்திக்கொண்டு ஹநுமாரை தூதுஅனுப்பி அந்த அசுரனை யுத்தத்திற்கு அழைத்தார் இது கேட்ட சதகண்டராவணனானவன் தன் சேனைகளை வரவழைத்து சேனாதிபதிகளைப் பார்த்து நீங்கள் புறப்பட்டு அந்த சத்ருஸைந்யங்களைக் கொன்று விடுங்கள் யென்று உத்திரவு செய்த உடனே அந்த ஸேனைகள் அநேகவிதமான ஆயுதங்களை யெடுத்துக் கொண்டு இந்தவானர ஸைந்யங்களின்மீது யுத்தத்திற்குவந்தார்கள். அந்தஸைந்யங்களைக்கண்ட சுக்ரீவன், நளன், நீலன், ஜாம்பவந்தன், மைந்தன், துவிதன் அங்கதன் முதலான வானரஸேனாதிபதிகள் யுத்தத்திற்கு ஆரம்பித்து விட்டார்கள் இரண்டு ஸேனைகளும் இரண்டு மாதகாலம் யுத்தஞ் செய்து அசுர்ஸைந்யங்களை வானரர்கள்

கொன்று விட்டார்கள். உடனே அசுரனானவன் மகாகோபங் கொண்டவனாய் தன்னிடத்தில் இருக்கும் மந்திரிகளைப் பார்த்து நீங்கள் புறப்பட்டு அந்த சத்ருக்களை ஹதம் செய்து விடுங்களென்று அனுப்பினான் அந்த கொடிய துஷ்டர்களான அசுரமந்திரிகள் தனுர்பாணங்களுடன் புறப்பட்டு இந்த வானர ஸைந்யத்துக் கெதிரில் நின்று கொண்டு அநேகபாணங்களை தொடுத்து இந்த வானர ஸைந்யங்களை கொன்றுவிட்டார்கள். இந்த வானரர்கள் இறந்து போனதைக்கண்ட சுக்ரீவன், ஜாம்பவந்தன், அங்கதன் இம்மூன்றுபேர் களும் மகா கோபவந்தர்களாய் அந்த அசுர மந்திரிகளின் மேல்விழுந்து தனுர் பாணங்களை ஒடித்து விட்டுத் தலைவேறாக காய்வேறாக கிள்ளி யெறிந்து விட்டு அந்த அசுரனாகிய சதகண்டனுக் கெதிரில் நின்று கொண்டு வாடா யுத்தத்திற்கு யென்று அழைத்தார்கள். இந்தவார்த்தயைக் கேட்ட ராவணனானவன் மகாகோபங் கொண்டவனாய் அநேக விதமான அஸ்தரசஸ்தரங்களை யெடுத்துக் கொண்டு ரதமேறி யுத்தரங்கத்திற்கு வந்து நின்று கொண்டு வாடா நரப்பயலே குரங்குகளை யழைத்துக் கொண்டு யுத்தத்திற்கு வந்துவிட்டாய் ரொம்பவும்பசியுடன்வந்திருக்கிறேன் நீங்களெல்லோரும் பெனக்கு ஆகாரமாய் விடப்போகிறீர்கள் சீக்கிரத்தில்புறப்பட்டு ஓடி விடுங்கள் என்று சொன்ன வசனங்களைக் கேட்ட ராமரானவர் சுக்ரீவனைப் பார்த்து ஓ! சுக்ரீவனே! நீபுறப்பட்டு அந்த அசுரனோடு யுத்தஞ் செய்யென்று சொல்ல சுக்ரீவனானவன் மகாகோபங் கொண்டு அந்த அசுரன்மேல் விழுந்து அவன் கைகளில் இருந்த அஸ்தர சஸ்திரங்களை பிடுங்கி யெறிந்துவிட்டு அவன் மார்பில் ஒரேகுத்தாக குத்தினான் அந்த அசுரனானவன் சற்று நேரம் பிரமித்து நின்று கொண்டு சுக்ரீவனைப் பார்த்து வேறேதனுர் பாணங்களை வரவழைத்து ஸுக்ரீவன் மேல் அநேக பாணங்களை வர்ஷித்து ஸுக்ரீவனை மூர்ச்சசையாய்த் தள்ளினான் அதைப்பார்த்துக் கொண்டிருந்த ஹனுமார் மகாகோபங் கொண்டவராய் ராவணனுக் கெதிரில் நின்றுக் கொண்டு அடேராவணா அவர்களைப்போல் என்னை எண்ணாதே இதோ என்னுடைய குத்திற்கு பதில் சொல்லென்று மார்பில் குத்தினார் அந்த குத்தைவாங்கிக் கொண்டு அநேகபாணங்களால் ஹனுமானை அடித்தான் ஹனுமார் அதிக கோபங் கொண்டு ஆகாயத்திற்குப் போய் அவனுடைய ரதத்திற்கு நேர்வந்து குதித்தவுடனே ரதமானது பொடிப்பொடியாய்ப் போய்விட்டது அதைக் கண்ட அசுரனானவன் பூமியில் இறங்கி நின்றுகொண்டு பாணங்களைசந்தித்து ஹனுமாரைவிட்டு ஸ்ரீராமன்மேல் பிரயோகித்தான் அவைக்கண்ட ராமரானவர் அசுரனைப் பார்த்துச் சொல்லுகிறார்.

உ0-வது அத்தியாயம் முற்றிற்று.

உக - வது அத்தியாயம்.

அடே ராவணா! உனக்கு மரணகாலம் நெருங்கிவிட்டது இனிமேல் ரிஷி ஸ்ரேஷ்டனுக்கும் எல்லாருக்கும் உன்னுடைய ஹிம்ஸை இல்லாமல் சௌக்கியத்தை யடையப்போகிறார்கள் என்னை இன்னாரென்றறிய வில்லை இதோ காண்பிக்கிறேன் பாரென்று கோதண்டத்தைக் கையில் பிடித்து நாணேற்றி பாணத்தை ஸந்தித்து அசுரன் மீது விட்டுவிட்டார். அந்தப் பாணமானது ஒன்று பத்து நூறு ஆயிரமாய் வளர்ந்து அந்தராவணன் திரேகத்தை துளைத்து விட்ட உடனே அசுரனுனவன் மகா கோபங் கொண்டவனாய் அநேக பாணங்களை ராமன்மீது ப்ரயோகித்தான் ராமரானவர் ஆக்னேயாஸ்திரத்தை ப்ரயோகிக்க அஸுரனுனவன் ஸௌராஸ்திரத்தை யெடுத்துப்ரயோகிக்க இப்படிக் கொருவருக்கொருவர் ஐந்திராஸ்த்ரம் வாருணாஸ்த்ரம் நாகாஸ்த்ரம் வாயுவாஸ்த்ரம் முதலான அநேக விதமான அஸ்திரங்களை ப்ரயோகித்துக் கொண்டார்கள். அதற்குமேல் ராமபிரான் அநேகபாணங்களை சந்தித்து அசுரனுக்கு ஒன்றும் தோணாமல் இருக்கும்படி இரண்டு கரங்களால் பாணங்களை சந்தித்து சரவர்ஷமாக வாஷித்தார் அசுரனுனவன் கதாயுதத்தை யெடுத்து சுழட்டி ராமர்மீது விட்டுவிட்டான் அந்தகாலத்தில் பக்கத்தில்நிற்கிற ஹனுமான்பார்த்து மிகவும் கோபங்கொண்டவராய் ராமன்மீதுவருகிற கதாயுதத்தை தன்கைகளினால் பிடித்துக் கொண்டார் உடனே ராமரானவர் ப்ரமஹாஸ்திரத்தை சந்தித்து அசுரனை சம்ஹாரித்து வாவென்று அனுப்பினார். அந்த ப்ரமஹாஸ்திரமானது ஜாஜ்வல்யமாய் சீறிக்கொண்டு அவனுடைய சிரஸையருத்து தள்ளிவிட்டுராமருடையஅம்பறாத்தூணியில் வந்து சேர்ந்துவிட்டது அசுரனுடைய தலையானது கீழ்விழுந்தவுடனே மறுபடியும் முன்போலவே நாருசிரஸ்ஸுகளும் உண்டாய்விட்டது அதுசவிரவும் அவனுடைய தேகத்திலிருந்து ரக்தமானது பூமியில் விழுந்தவுடனே ஒரு பிந்து விக்கு ஒரு ராவணனாக அநேக ராவணர்கள் உண்டாய்விட்டார்கள். ராமரானவர் உடனே பாணங்கள் சந்தித்து அவனுடைய சிரஸுகளை அருக்க அதிலிருந்து ரத்தம் விழுந்த உடனே மறுபடியும்அநேக ராவணர்கள் உண்டாயினார்கள் இம்மாதிரியாக ராமர் பாணங்களினாலே அசுரர்களுடைய சிரஸுகளை ஸம்ஹரிப்பதும் உடனே அசுரர்கள் உண்டாகிறதும் அதைப்பார்த்து ஆஞ்சனேயரானவர் தன்கையிலிருக்கிற கதாயுதத்தை யெடுத்துக் கொண்டு ராக்ஷஸ கூட்டங்களை ஹதம் செய்கிறதும் இவ்விதமாக ஆயிரம் வருஷகாலம் யுத்தஞ் செய்தார்கள் சதகண்டராவணன் இந்தராக்ஷஸ கூட்டங்கள் மத்தியில் நின்றுகொண்டு கோபாவேசங்கொண்டு சக்தியாயுதத்தை யெடுத்து ராமர் பேரில் விட்டுவிட்டான். அந்த சக்த்யாயுதமானது ராமனுடையமார்பில் தைத்துவிட்டது. விழுந்தஉடனேராமர்ஒன்றுந் தோணாதவராய் மூர்ச்சையாய்விழுந்து விட்டார் உடனேலக்ஷ்மணர் ஸத்ருக்னர் பரதர் இவர்களும் அநேகவிதமான யுத்தஞ் செய்து அந்தராக்ஷ

ஸனல் அடிபட்டு மூர்ச்சையாய் விழுந்து விட்டார்கள் அனுமாரும் அநேக விதமாய் யுத்தஞ்செய்தும் அந்த ராக்ஷஸ கூட்டங்கள் சாகாமல் யிருக்கிறதைக் கண்டு தானும் மூர்ச்சையாய் விழுந்து விட்டார் இவர்கள் எல்லோரும் மூர்ச்சையாய் விழுந்து விட்டதை பக்கத்தில் பார்த்துக் கொண்டிருந்த ஸீதாதேவி யானவள் தன் பர்த்தாவை தட்டி யெழுப்பியும் அவர் ஒன்றும் தோனாமல் இருக்கிறதைக் கண்டு தான் ஹநுமானை வரவழைத்து ஆஞ்சனேயரே ப்ராணநாதன் ஒன்றும் பேசாமல் இருக்கிறார் அசுரர்களோ சும்மா இருக்கமாட்டார்கள் இனிமேல் நாம் யென்னசெய்கிறது ஒன்றும் தோன்றவில்லையே. யென்று சொல்லிக்கொண்டு ராமரைப் பார்த்தாள் அப்போது ராமருக்கு கொஞ்சம் மூர்ச்சை தெளிந்ததினல் கடைக்கண்ணினால் ஸீதாதேவியைப்பார்த்து நீ யுத்தம் செய்து அந்த அசுரனை ஸம்ஹரித்து விடு உன்னால்தான் அவனுக்கு மரணமென்று தெரியவருகிறது என்று நயனபாஷையினல் உத்திரவு கொடுத்து தான் கண்ணை மூடிக்கொண்டு நித்திரை செய்தார்.

௨க-வது அத்தியாயம் முற்றிற்று.

௨௨-வது அத்தியாயம்.

உடனே ஸீதாதேவியானவள் தன்னுடைய பத்ரகாளி அம்சத்தை யெடுத்துக் கொண்டு கோரமான ரூபத்தையெடுத்து ஹனுமானை யழைத்து ஓ! ஹனுமானே! நீருத்ராம்சமாகையால் யெனக்கு வாஹனமாய் நில்லென்று சொன்னவுடனே ஆஞ்சனேயர்பஞ்சமுகத்தோடே கோரமான தந்தங்களை யுடையவராய் விச்வரூபத்தை யெடுத்து தேவியெதிரில் நிற்க தேவியானவள் அவன் முதுகில் ஏறிக் கொண்டு அநேகமான ஆயுதங்களை கையில் தரித்து அநேக ராக்ஷஸ கூட்டங்களுடன் நிற்கின்ற சதகண்டராவணனுக் கெதிரில் நின்றாள் அசுரனானவன் இந்த தேவியைப்பார்த்து ஓ பெண்பாலே நீ யேன் இவ்விடத்திற்கு வந்தாய் வீணாய் மடிந்து விடுவாய் தவிரவும் ஸ்திரீஹத்திதோஷமும் எனக்கு வந்துவிடுகிறது வீணாய் என் நிற்கிறாய் சுகமாக போய்விடு என்று சொன்ன உடனே தேவியானவள் ஒரு தரம் சிரித்து அடே மூர்க்கா உனக்கு நான்பதில் சொல்லவேண்டியதில்லை இதோ உன்னை ஹதம் செய்துவிடுகிறேன் யென்று கையில் கத்தி யெடுத்துக்கொண்டு அந்தஅசுரனுடைய சிரஸுகளை அறுத்துத்தள்ளின உடனே மறுபடியும் சிரஸுகள் உண்டாய்விட்டது ரக்தங்கள் பூமியில் விழுந்த உடனே பின்னையும் அசுரகூட்டங்கள் உண்டாய் விட்டது இதைப்பார்த்துக் கொண்டு தேவியானவள் கொஞ்சம் யோசித்து பூதப்ரேத பிசாசங்களை வரவழைத்து ரக்தங்களை சாப்பிடும்படி உத்திரவு கொடுத்த உடனே அந்த பூத கணங்கள் நிமிஷ மாத்திரத்தில் அந்த ரக்தங்களை சாப்பிட்டவுடனே தேவியானவள் அசுரகூட்டங்களை அறுத்துத்தள்ளவும்

இந்தமாதிரியா யிராவணன் தவிர ஸமஸ்தமான அஸுரகூட்டங்களெல்லாம் நாசமடைந்து விட்டன. சதகண்டராவணன் மாத்திரம் நிற்கிறதைக் கண்டு தேவியானவள் அவனுடைய நூறுதலைகளையும் அறுத்துத்தள்ள அதிலிருந்து வருகிற ரக்தங்களைப் பானம்பண்ண சிரஸுகள் உண்டாய்விடுகிறது, மருபடியும் அறுத்துத்தள்ளுகிறதும்,பூதங்கள் ரக்தங்களைப் பானம் பண்ணுகிறதும் இம்மாதிரியாக யெத்தனை தரம் வெட்டினாலும் மறுபடியும் உண்டாய் விடுகின்றன ; அசுரனுடைய ப்ராணம் போகிறதில்லை. ஸீதாதேவியானவள் சற்றுநேரம் யோசித்து இவனுடைய ப்ராணன் போகிறதற்கு மார்க்கம் தெரியவில்லை யென்று யோக திருஷ்டியில் கொஞ்சம் யோசித்து நின்றாள். உடனே அறிந்துகொண்டவளாய் ஆஞ்சநேயரைப் பார்த்துச் சொல்லுகிறாள்:—ஓ ஹனுமாரே! இந்த அசுரனுடைய ப்ராணனானது ஏன் போகவில்லை தெரிய வருமா? இவனுடைய பஞ்சப்ராணன்களையும் ஒரு தடாகத்தில் தாமரைக் கொடியின் த்வாரத்தில் வைத்திருப்பதால் இவன் ஜீவித்திருக்கிறான் அந்தத் தடாகம் எவ்விடத்தி லிருக்கிறதென்றால் ஜம்பூத்வீபத்தில் விந்திய பர்வதத்திற்குத் தென்புறத்தில் ஐவ்வாது பர்வதங்களுக்குள் குண்டலீ நகரமென்று ஒரு பட்டணம் உண்டு. அந்நகரத்தில் ரேணுகாதேவி ஆலய மென்று ஒரு ஆலய மிருக்கிறது. அதற்குப்பக்கததில் பத்மஸரஸ்ஸு என்று ஒரு தடாகத்தில் தாமரைத்தண்டிற்குள் ஒரு வண்டிருக்கிறது. அந்த வண்டின் ஹிருதயத்தில் இவனுடைய ப்ராணனானது தங்கியிருக்கிறது. இதுதவிரவும் அந்த ரேணுகாதேவியைக் குறித்துத் தவஞ்செய்து அநேக அஸ்தர சஸ்திரங்களைப் பெற்றுக்கொண்டு அந்த தேவியினுடைய அனுக்ரஹத்தினால் இவனுடைய ப்ராணனும் மறைந்திருக்கிறது. ஆகையால் நீ புறப்பட்டு ஜம்பூத்வீபத்துக்குப் போய் அந்தகுண்டலீ நகரஞ் சென்று கமண்டலு நதியில் ஸ்நானஞ் செய்து அந்த ரேணுகா தேவியைத் தர்சித்து பிறகு அந்ததடாகம் சென்று தாமரைத் தண்டிலிருக்கும் வண்டைக் கொன்றுவிட்டால் இவனுடைய ப்ராணன் போய் விடும் ஆகையால் நீ சீக்கிரம் புறப்பட்டுப் போகவேண்டு மென்று சொன்ன உடனே ஆஞ்சநேயர் புறப்பட்டார்.

உஉ-வது அத்தியாயம் முற்றிற்று.

உங-வது அத்தியாயம்.

ஆஞ்சநேயர் [illegible]த்வீபத்திலிருந்து ப்ரயாணப் பட்டு அதிவேகமாய் குண்டலீநகரம் வந்து ரேணுகா[illegible] லக்ஷியம் பண்ணாமல் பத்மஸரஸைக் குறித்துப் போகிறபோது ரேணுகையானவள் அந்தத் தடாகத்தைமறைத்து விட்டாள். ஆஞ்சநேயர் தேடித்தேடி அக்குளம் காணாமல் கோபங்கொண்டவராய் இப்பட்டணத்தையும் ஆலயத்தையும் [illegible]தம் செய்கிறேனென்று ஆலயத்

துக்கெதிரில் குதித்தார். உடனே தேவியானவள் சூலாயுதத்தை தரித்துக் கொண்டவளாய் ஹனுமாரைப் பார்த்து நீ யாரடா வென்று கேழ்க்க உனக்கு நான் பதில்சொல்லவேண்டியதில்லே. என்னோடேயுத்தத்திற்குவாவென்றுசொன்னவுடனே ரேணுகையானவள் கோபங்கொண்டு சூலாயுதத்தினால் ஹனுமாரை யடித்தாள். உடனே ஆஞ்சநேயர் வீராம்சத்தினால் பஞ்சமுகத்தோடு நின்றார். அதுகண்டதேவியானவள் பத்துசிரஸோடு நின்றாள். ஹனுமார் இருவது சிரஸையடைந்தார். இந்தமாதிரியாக ஒருவருக்கொருவர் ஆயிரம் சிரஸ்ஸுகளையடைந்துயுத்தஞ்செய்தார்கள். இவ்விதமாயுத்தஞ்செய்துகொண்டிருக்கிற காலத்தில் ஹனுமார் கோபங்கொண்டு இப்பட்டணத்தை ஹதஞ்செய்து இந்த ஆலயத்தையும் இடித்து எறிவிடுகிறேனென்று சொல்லி நகரத்தைக் குறித்துப்போகையில் ரேணுகை அதிக கோபங்கொண்டு ஹனுமாரை கல்லாகக்கடவதென்று சபித்தாள். ஹனுமார் தேவினுடைய சாபத்தையடைந்து தன் தேகம் சிலாரூபமடைந்ததால் தனக்கு ஒன்றுந்தோன்றாமல் துக்கத்தையடைந்து ரேணுகையைப்பார்த்துச் சொல்லுகிறார்: ஓ ரேணுகா! நான் ராமகார்யார்த்தமாய் இவ்விடம் வந்தேன்; என்னை நீ இப்படி செய்ததினால் உன்னகரமும் ஆலயமும் மண்மாரி பெய்து நாசமடையக்கடவதென்று சபித்துவிட்டு ஸ்ரீ ராமசந்திரனை மனதில் தியானித்தார். ஸ்ரீ ராமர் சாகரத்வீபத்தில் மூர்ச்சைதெளிந்து ஹனுமாரைப்பார்க்க அவ்விடத்திலிராமையை யோசித்துக்கொண்டிருக்கிற ஸமயத்தில் ஹனுமார் தியானித்ததைத்தெரிந்து கொண்டவராய் இந்த குண்டலீ நகரம் வந்து இவர்களிருவரும் இருக்கின்ற இடத்திற்கு வந்து சேர்ந்து இருவரையும் பார்த்து நடந்தவறலாற்றை யறிந்துகொண்டு ரேணுகாதேவியைப்பார்த்துச் சொல்லுகிறார். ஓ ரேணுகாதேவீ! இப்போது ஹனுமான் இவ்விடம் வந்த காரணம் என்னவென்றால்:—சாகரத்வீபத்தில் சதகண்டராவணனென்கிறவன் இருக்கிறான். அவன் அநேக ரிஷிகளையும் ஸாதுக்களையும் ஹிம்ஸித்துவருகிறான் அவனை கொன்றுவிடென்று ஆகாயவாணியெனக்குச்சொன்னதின்பேரில் நான்வானரஸைந்யங்களோடு அந்த இடத்திற்குச் சென்று அந்த அசுரனோடு அநேகவிதமான யுத்தஞ்செய்தும் அவன்மரணமடையவில்லே. எத்தனைதரம் சிரசுகளை யறுத்துத்தள்ளினாலும் மறுபடியும் சிரசுகள் உண்டாய்விடுகின்றன. உடனே யோசித்துப் பார்த்ததில் அவனுக்குப் புருஷனால் மரணம்கிடையாதென்று [illegible] யுத்தஞ்செய்யஅனுப்பிவிட்டு நான்யோகத்திலிருந்தேன். வி[illegible]தையான[illegible] அநேக யுத்தஞ்செய்தும் இவனுடைய பிராணனானது போகாமை[illegible]கண்டு ஞான திருஷ்டியினால் அறிந்துகொண்டு அந்த அனுமானை ய[illegible] உன்னுடைய பத்மஸரஸ் என்கிற தடாகத்தி[illegible] அசுரனுடைய ப்ராணனிருந்து இருக்கிறது. அதைக்கொன்றுவிட்டுவாவென்று அனுப்பினேன். அதனால் இவ்விடம் வரும்படியாய் நேரிட்டது. ஆகையால் நீ தயவுசெய்து ஹனுமானுடைய சாபத்தை நீக்கி அந்தத்தடாகக்க[illegible]யக் காண்பிக்கவேணுமென்று பிரார்த்

த ராமனைப்பார்த்து ரேணுகையானவள் சொல்லுகிருள்:—கேளும் இராம சந்திரனே அந்த சதகண்டராவணன் என்னுடைய பக்தன்; அவனுடைய ப்ராணனுனது என்னுடைய தடாகத்திலிருக்கிறது. அதையும் நான் காண்பித்தால்மாத்திரம் தவிர மற்றோர்களுக்குத்தெரியாது. நீர் கேட்டுக்கொண்டமையால் காண்பிக்கிறேன்; ஆனால் இந்த ஹனுமான் கர்வத்தினுல் என்னை லக்ஷியம்பண்ணுமல் எதிர்த்து ஆயிரம் சிரஸுடன் யுத்தஞ்செய்ததினுல் சிலாரூபத்தையடைந்தான். இப்போது உன்னிமித்தம் சாபத்தை நீக்கிவிடுகிறேன் ஹனுமான் என்னிடம் காவலாக இருக்கவேண்டும்; தவிர ஆயிரம் சிரசுகளினுல் யுத்தஞ்செய்ததினுல் இவ்விடத்தில் ஆயிரம் பர்வதங்கள் ஆய்விடும் நீரும் என்னிடத்தில் வாஸஞ்செய்யவேண்டும்; இந்த ஹனுமானுல் என்னுடைய பட்டணத்திற்கும் ஆலயத்திற்கும் ஏற்பபட்ட சாபத்தை நீக்கி விடவும் என்று சொன்ன வசனங்களையெல்லாங் கேட்டு ஸ்ரீ ராமர்சொல்லுகிருர். ஓ ரேணுகாதேவி நீ சொல்லியபடி நானும் ஹனுமானும் வசித்துக்கொண்டிருக்கிறோம்; இந்நகரத்திற்கு இப்போது அழிவு இல்லை. கலியுகத்தில் நந்தனென்று ஒரு அரசன் இந்த குண்டலீநகரத்தை ஆளப்போகிருன், அவனுல் அநேக கொடுமைகள் ஏற்பட்டு அதனுல் மண்மாரிபெய்து அழியப்போகிறது. அந்த காலத்தில் உன்னுடைய ஆலயமும் என்னுடைய ஆலயமும் அழியாமலிருக்கும். இம்மாதிரியாக கொஞ்சகாலம் சென்று ஐயாயிரம் வருஷத்திற்குமேல் இப்போது இருக்கிறமாதிரியாக இந்த குண்டலீநகரமானது ஆய்விடும். இனிமேல் எங்களுர்க்கு உத்தரவு கொடு என்று சொன்னவுடனே ரேணுகாதேவியானவள் இவர்களிருவரையும் அழைத்துக்கொண்டு பத்மரஸஸு யென்கிற தடாகஞ்சென்று தாமரைத்தண்டில் இருக்கும் வண்டைக் காண்பித்துத் தன் ஆலயத்திற்கு வந்துவிட்டாள். உடனே ஹனுமார் முன் போல் அதிபலபராக்ரமசாலியாய் அக்குளத்தில் மூழ்கி அந்தவண்டைக் கொன்றுவிட்டு இருவருமாக சாகத்வீபத்தைக் குறித்துப் போனுர்கள்.

உரு-வது அத்தியாயம் முற்றிற்று.

உசு-வது அத்தியாயம்.

இப்படிக்கின் சீதாதேவியானவள் சக்தியாயுதத்தை எடுத்து அந்த சதகண்டராவணன்மீது பிரயோகித்தாள்; அந்த அஸ்திரமானது அசுரனுடைய மார்பில் நுழைந்ததற்கும் இந்த தடாகத்தில் தாமரைத்தண்டிலிருந்த வண்டானது இறந்ததற்கும் சரியாயிருந்ததால் சதகண்டராவணனுனவன் ஹாவென்னும் பேரிரைச்சலுடன் மலையைப்போலே கீழேவிழுந்து இறந்துவிட்டான். அந்தக்காலத்தில் ஆகாயத்தில் பார்க்கவந்திருந்த தேவர்களெல்லாம் சந்தோஷித்தவர்களாய் புஷ்பவிருஷ்டிகளை வருஷித்தார்கள். ஜெய

பேரியையும் அடித்தார்கள். இந்த சமயத்தில் இந்த ராமர் அனுமார் இவ்விருவரும் அவ்விடம் போய்ச் சேர்ந்தார்கள். உடனே சீதாதேவியானவள் முன்போல் மானிடரூபத்தைத்தரித்துக்கொண்டு பர்த்தாவாகிய ஸ்ரீராமரை நமஸ்கரித்து ஆஞ்ஜநேயருக்கு ஆசீர்வதித்தாள். மறுபடி வானரக்கூட்டங்கள் இறந்துகிடக்கிறதைத் தன் கடைக்கண்ணினால் கடாக்ஷித்துப்பார்த்து எல்லாரையும் எழுப்பிவிட்டாள். இவர்கள் இப்படியிருக்க சதகண்டராவணனுடைய மரணத்தைக் கேள்விப்பட்டு சதகண்டராவணனுடைய குமாரன் நீலகேது என்பவன் ராமரிடம் வந்து காப்பாற்றவேண்டுமென்று நமஸ்கரித்தான். உடனே ராமர் நீலகேதுவென்கிற அசுரனைத் தனது பக்தனாகச்செய்து கொண்டு மாயாபுரிக்குப் பட்டாபிஷேகஞ்செய்வித்துஆசீர்வதித்தார். உடனே வானரஸைந்யங்களுடன் சாகரத்வீபத்தைவிட்டு ஆஞ்சநேயர்மீது யேறிக்கொண்டு அயோத்யாபுரிக்கு வந்துவிட்டார்கள் என்று சூதமுனிவர் சௌனகாதிகளுக்குசொல்லிவிட்டுப் பின்னுஞ்சொல்லுகிறார். கேளுங்கள்ரிஷிகளே இந்தக் காரணத்தினால் ரேணுகாதேவி ஆலயத்துக்குப் பக்கத்தில் ஸ்ரீராமருடைய ஆலயம் இப்பொழுதும் ப்ரகாசித்துக்கொண்டிருக்கின்றது. அதுதவிரவும், பூர்வத்தில் தாரகாஸுரனை ஸம்ஹரித்த சுப்ரமணியஸ்வாமிக்கு இந்திரனானவன் தன் குமாரத்தியை விவாகம் செய்வித்து தேவஸேனாதிபத்யத்தைக் கொடுப்பதற்கு முப்பத்துமுக்கோடிதேவர்களும் ஒன்றுகூடி குண்டலீநகரம் வந்து ஒரு இடத்தில் குமாரஸ்வாமிக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தார்கள். அதுமுதற்கொண்டு தேவியினுடைய ஆலயத்துக்குப்பக்கத்தில் குமாரஸ்வாமியினுடைய ஆலயம் இருக்கிறது. இப்பேர்ப்பட்ட மகிமையுள்ள ரேணுகாதேவியினுடைய மகிமையைச் சொன்னேன். ரிஷிகளே நாம் எல்லோரும் இந்தத் தேவியினுடைய மஹிமையைக்கேட்டாலும் வாசித்தாலும் தேவியைத் தரிசித்தாலும் இஹத்தில் ஸ்போடகோபத்ரவ நிவாரணங்களேயும், இஷ்டகாம்யங்களைப் பெற்று பரத்தில் ஸாயுஜ்யத்தை அடைவார்களென்று சொன்ன சூதமுனிவருடைய வசனங்களைக்கேட்டு சௌநகாதி ரிஷிகள் ஆனந்தபரவசமடைந்தார்கள். ரேணுகாதேவி புராணம் முற்றிற்று.

இதற்கு மேல் கலியுக ஆதியில் லோககுருவாகிய ஆதிசங்கராசாரியர் திக்விஜயஞ்செய்து வருங்காலத்தில் இந்த ரேணுகாதேவி ஆலயத்துக்கு வந்து தேவியைத்தியானித்து நிற்கிறகாலத்தில் தேவியானவள் உக்ரரூபத்தையெடுத்துக்கொண்டு எதிரில் வந்து தர்சனம் கொடுத்தாள். அந்தத்தேவியைப் பார்த்த ஆசாரியர் அம்மனுக்கெதிரில் ஸ்ரீசக்கரத்தை ஸ்தாபித்து உக்ரரூபத்தைத்தணித்து சாந்தத்தை யடையும்படி பிரார்த்தித்து அநேக வரங்களைப் பெற்றுக்கொண்டார். ஆகையினால் யாதொருவர் இந்த சரித்திரத்தைக் கேட்டாலும் மற்றவர்களுக்குச் சொன்னாலும் இஹபர ஸுகங்களை யடைவார்கள்.

முற்றிற்று.